நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**உழவர் பெருவிழாவில் பயனடைந்த 12 ஆயிரம் விவசாயிகள்**

44 கிராமங்களில் நடந்த உழவர் பெருவிழாவில் 12,320 விவசாயிகள் பங்கேற்று பயனடைந்தனர் என உதவி வேளாண்மை இயக்குநர் ஏ.சங்கர் தெரிவித்தார்.

கடந்த ஒரு மாதமாக நடந்து வந்த உழவர் பெருவிழாவின் நிறைவு விழா எல்.என்.புரம் ஊராட்சியில் புதன்கிழமை

நடந்தது.

வேளாண்மையில் நவீன தொழில்நுட்பங்களையும், இயந்திரத்தையும் பயன்படுத்தி உணவு உற்பத்தியை பன்மடங்கு பெருக்க வேண்டும் என்ற நோக்கில், தமிழக முதல்வரால் உழவர் பெருவிழா நடத்தப்பட்டு வருகிறது.

கடந்த ஒரு மாதகாலமாக நடந்து வந்த உழவர் பெருவிழாவின் நிறைவு விழா, எல்.என்.புரத்தில் புதன்கிழமை நடந்தது.

உதவி வேளாண்மை இயக்குநர் ஏ.சங்கர் தலைமை தாங்கினார். மாவட்ட கவுன்சிலர்கள் கே.தேவநாதன், மாலாபெருமாள், அட்மா குழுத் தலைவர் ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஒன்றிய கவுன்சிலர் ஜோதிபழனி, ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் சக்திவேல், தோட்டக்கலை உதவி இயக்குநர் பிரேமா, வேளாண்மை அலுவலர் மகேஷ், உதவி வேளாண்மை அலுவலர்கள் ரத்தினம், சங்கர்தாஸ், குமார், செந்தில்குமார், விஸ்வநாதன், பூங்குணம் தொடக்க வேளாண்மை கடன் சங்கத் தலைவர் சந்தானம், அட்மா திட்ட அலுவலர் பாலசுப்ரமணியன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தினமணி செய்தியாளரிடம் உதவி வேளாண்மை இயக்குநர் ஏ.சங்கர் கூறியது: "பண்ருட்டி வட்டாரத்தில் உள்ள 44 கிராமங்களில் உழவர் பெருவிழா சிறப்பாக நடத்தப்பட்டது. இதில் 12,320 விவசாயிகள் பங்கேற்று பயனடைந்தனர். 2,480 விவசாயிகள் மண் பரிசோதனைக்கு மண் மாதிரிகள் வழங்கியுள்ளனர். 1,736 விவசாயிகளுக்கு விவசாய ஒருங்கிணைப்பு கையேடு வழங்கப்பட்டுள்ளது.

மேலும்,மண் மாதிரி எடுத்தல், விதை நேர்த்தி, திருந்திய நெல் சாகுபடி, முந்திரி ஒட்டு கட்டுதல் போன்றவை குறித்து செயல் விளக்கம் செய்து காட்டப்பட்டுள்ளது' என கூறினார்.

**சர்க்கரை ஆலையைத் திறக்கக்கோரி 46 ஆம் நாளாக ஊழியர்கள் போராட்டம்**

மதுரை மாவட்டம், பாண்டியராஜபுரம் சர்க்கரை ஆலையைத் திறக்கக்கோரி ஊழியர்கள் 46 ஆவது நாளாக வியாழக்கிழமையும் தொடர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர்.

பாண்டியராஜபுரத்தில் உள்ள சர்க்கரை ஆலை கடந்த 12 ஆண்டுகளுக்கு முன்பு மூடப்பட்டது. இங்கு பணியாற்றிய பகுதி நேர ஊழியர்கள் உள்ளிட்டோர் ஆலையைத் திறக்கக் கோரி போராடி வருகின்றனர்.

அவர்கள் 46 நாள்களாகத் தொடர் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர். அவர்கள் வியாழக்கிழமை காலை கழுதைகளுடன் வந்து உண்ணாவிரதத்தைத் தொடங்கினர். இதில் கணேசன் தலைமையில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

ஆலைப் பணி இல்லாததால் தங்களை கழுதை மேய்க்கக்கூட லாயக்கில்லை என மற்றவர்கள் பேசுவதால் கழுதையுடன் போராடுவதாக ஊழியர்கள் தெரிவித்தனர்.

வரும் 21 ஆம் தேதி மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு முற்றுகைப் போராட்டம் நடத்தவும், அதைத் தொடர்ந்து வாடிப்பட்டி தாலுகா அலுவலகம் முன்பு தொடர் போராட்டம் நடத்தவும் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

**விவசாயிகளுக்கு மானியத்துடன் சூரிய சக்தி பம்ப் செட்டுகள் வழங்கும் திட்டத்துக்கு வரவேற்பு**

முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ள, விவசாயிகளுக்கு மானியத்துடன் சூரிய சக்தி பம்ப்செட்டுகள் வழங்கும் திட்டத்துக்கு வேளாண் உணவுத் தொழில் வர்த்தக சங்கம் வரவேற்பு தெரிவித்துள்ளது.

இது குறித்து அச் சங்கத்தின் தலைவர் எஸ். ரத்தினவேலு வெளியிட்டுள்ள அறிக்கை:

தமிழகத்தில் டெல்டா மாவட்டங்களில் சூரிய சக்தியால் இயங்கும் ரூ.5 லட்சம் மதிப்புள்ள 5 குதிரைத் திறன் கொண்ட மோட்டார் பம்ப் செட் 80 சதவீத மானியத்துடன் வழங்கும் திட்டத்தை முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

இப்போது 2 ஆயிரம் விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ள இத்திட்டம் படிப்படியாக மேலும் அதிக எண்ணிக்கையிலான விவசாயிகளுக்கு நீட்டிக்கப்படும் என எதிர்பார்க்கிறோம்.

வேளாண் துறைக்கு இலவச மின்சாரம் வழங்கி வரும் தமிழகம், கடும் மின்பற்றாக்குறையைச் சந்தித்து வருகிறது. நாளுக்கு நாள் மின்சாரத்தின் தேவை அதிகரித்து வருகிறது. இச்சூழலில் சூரியசக்தியால் இயங்கும் மோட்டார் பம்ப் செட்டுகளை மானியத்துடன் விவசாயிகளுக்கு வழங்கும் இத் திட்டத்தை அரசு செயல்படுத்த உள்ளது பாராட்டுக்குரியது எனத் தெரிவித்துள்ளார்.

**அம்மாபட்டியில் உழவர் பெருவிழா**

நிலக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் அம்மாபட்டியில் உழவர் பெருவிழா நடந்தது.

விழாவுக்கு அ.தி.மு.க. ஒன்றியச் செயலாளர் தண்டபாணி தலைமை வகித்தார்.

ஊராட்சி ஒன்றியக் குழு தலைவர் யாகப்பன் முன்னிலை வகித்தார். வேளாண் உதவி இயக்குநர் சங்கரபாண்டியன், துணை வேளாண்மை அலுவலர் பழனிசாமி ஆகியோர் வரவேற்றனர். உதவி வேளாண்மை அலுவலர்கள் தனராமன், சேவியா்ராஜ், மைக்கேல் தம்புராஜ், சாகுல்அமீது, விமலா உட்பட தோட்டக்கலை துறையினர், வேளான்

பொறியியல் துறையினர், வேளான் வணிகத்துறையினர் கலந்து கொண்டனர்.

விழாவில் துறை வாரியாக செயல்படுத்தப்படும் திட்டங்கள், மண் மாதிரி எடுத்தல், உர நேர்த்தி, எலி ஒழிப்பு செயல் விளக்கங்கள் விவசாயிகளுக்கு செய்து காண்பிக்கப்பட்டன. இடு பொருள்கள் வழங்கப்பட்டன.

**முருங்கை வளர்க்க பயிற்சி முகாம்**

திண்டுக்கல் மாவட்டம் பட்டிவீரன்பட்டி என்.எஸ்.வி.வி. ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் தேசிய பசுமைப் படை சார்பாக வீட்டு தோட்டத்தில் முருங்கை வளர்க்கப் பயிற்சி முகாம் நடந்தது.

முகாமுக்கு பள்ளித் தலைவர் அசோக்பாபு தலைமை தாங்கினார். செயலாளர் கோபிநாத், தலைமை ஆசிரியர் ராஜகுரு ஆகியோர் முன்னிலை வகித்தனர். தேசிய பசுமைப் படை ஒருகிங்ணைப்பாளர் ரவீந்திரன் வரவேற்றார். முகாமில் பங்குபெற்றவர்களுக்கு முருங்கை கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டன. முகாமில் தேசிய பசுமை, ஜே.ஆர்.சி. நாட்டு நலப்பணி திட்டம் ஆகிய அமைப்புகளை சேர்ந்த மாணவர்கள் பயிற்சி பெற்றனர்.

**ராமநாதபுரம் மாவட்டத்தில் முதல் முறையாக செடிஅவரை பயிரிடும் பணிகள் துவக்கம்**

ராமநாதபுரம் மாவட்டம் நயினார்கோவில் ஒன்றியத்துக்கு உட்பட்ட பாண்டியூர், சின்ன அக்கிரமேசி உள்ளிட்ட கிராமங்களில் முதல் முறையாக செடிஅவரை காய்கறி பயிரிடும் பணிகள் தொடங்கியுள்ளன.

பொதுவாக காய்கறி வகைகளில் ஒன்றான கொடி அவரைக்காய் பற்றித்தான் பெரும்பாலும் பலரும் அறிந்திருப்போம். கொடி அவரை பயிரிட்டால் தனியாக அதற்கென்று பந்தல் போட வேண்டும், செலவு அதிகமாகும், ஊடு பயிர் எதுவும் விளைவிக்க முடியாது. இதற்கு மாற்றாக விவசாயிகளின் செலவை குறைக்கவும், காய்கறி வகைகளில் அவரை விளைச்சலை அதிகரிக்கவும் வேளாண்மைத்துறையின் தோட்டக்கலைத்துறை சார்பில் பல மாவட்டங்களில் செடி அவரை பயிரிட விவசாயிகள் பலரும் ஊக்கப்படுத்தப்பட்டு வருகின்றனர்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் தற்போது முதல் முறையாக நயினார்கோவில் ஒன்றியம் பாண்டியூர் கிராமத்தில் விவசாயி கோமதிநாயகமும், சின்ன அக்கிரமேசி கிராமத்தில் சுப்பிரமணி என்ற விவசாயியும் தங்களது விளைநிலங்களில் அரை ஏக்கர் மட்டும் பரிட்சாத்த முறையில் செடி அவரை பயிரிட்டுள்ளனர்.

செடி அவரை பயிரிட்டால் காய்ப்புத்திறன் அதிகமாக இருக்கும். அதிக உரம் போடத் தேவையில்லை. பூச்சியும் அதிகம் தாக்காது, நிலக்கடலை, தக்கைப்பூண்டு போன்று வேர்களின் மூலமாக தேவையான உரத்தை தானாகவே காற்று மற்றும் சூரிய ஒளி மூலம் எடுத்துக் கொள்ளும் குணமுடையது. பயிரிட்ட அறுபதாவது நாளிலேயே அவரைக்காய்கறிகளை பறிக்கத் தொடங்கி விடலாம். இது குறித்து ராமநாதபுரம் மாவட்ட தோட்டக்கல்வித்துறை உதவி இயக்குநர் இளங்கோவன் கூறியது: செடி அவரை பயிரிட்டால் கொடி அவரையைப் போன்று பந்தல் அமைக்கத் தேவையில்லை. கிரை வகைகளையும்,

கொடி வகைக் காய்கறிகளான பீர்க்கங்காய்,புடலங்காய், சுரைக்காய்,பாகற்காய் போன்றவற்றையும் கூட ஊடு பயிராக சேர்த்துப் பயிரிடலாம். ஆனால் கொடி அவரையில் ஊடுபயிர் எதுவும் விளைவிக்க வாய்ப்பில்லை. தமிழகத்தில் சேலம்,

திண்டுக்கல், கோயம்புத்தூர், மதுரை ஆகிய மாவட்டங்களில் செடி அவரை பிரபலமாகி வருகிறது.

இதன் மகத்துவத்தை உணர்ந்து தற்போது ராமநாதபுரம் மாவட்டத்திலும் முதல் முறையாக இரு விவசாயிகள் செடி அவரை பயிரிட்டுள்ளனர் எனவும் இளங்கோவன் தெரிவித்தார். இது குறித்து ராமநாதபுரம் மாவட்ட வேளாண் தொழில் நுட்ப வல்லுநர் ஏகாம்பரம் கூறுகையில், செடி அவரை பயிரிட்ட 60 ஆவது நாளில் இருந்து தொடர்ந்து 3 மாதங்களுக்கு ஒரு வாரத்துக்கு 60 கிலோ வீதம் வரை பறிக்கலாம். இதுவே மழைக்காலமாக இருந்தால் ஒரு வாரத்துக்கு 250 கிலோ வரை அவரைக்காய் பறித்து அதிக வருமானம் ஈட்டலாம். வியாபாரிகள் விவசாயிகளிடம் ஒரு கிலோ ரூ.25க்கு வாங்கி ரூ.60 வரை விற்பனை செய்கிறார்கள். ராமநாதபுரம் அருகே பாண்டியூர் கிராமத்தில் விவசாயி கோமதிநாயகம் செடி அவரை பயிரிட்டுள்ளார். அதே நிலத்தில் வாழை, வெங்காயம், உளுந்து ஆகியவற்றை ஊடுபயிராகவும் பயிர் செய்துள்ளார்.

மிகக்குறைந்த செலவில் விவசாயிகள் அதிக லாபம் பெற செடி அவரை பயிரிட்டுப் பலன் பெறலாம் எனவும் ஏகாம்பரம் தெரிவித்தார்.

**வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம்: ஆட்சியர்**

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளதாக ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் க. நந்தகுமார் வியாழக்கிழமை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: இந்த ஆண்டு நெல் பயிரிட்ட விவசாயிகளுக்கு அரசு ஏக்கருக்கு ரூ.5 ஆயிரம் நிவாரணம் அளித்துள்ளது. எனவே விவசாயிகள் தங்களுக்குரிய நிவாரணத்தொகையை பணமாக தங்கள் ஊருக்கு அருகாமையில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தில் பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒருநாள் என ஒதுக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் தங்கள் கிராமத்துக்கு எந்த தேதியில் பணம் வழங்கப்படும் என்பதை கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்திலும், பஞ்சாயத்து அலுவலகத்திலும், கூட்டுறவு சங்க நோட்டீஸ் போர்டில் ஒட்டப்பட்டுள்ள அறிவிப்பிலிருந்தும் தெரிந்து கொள்ளலாம்.

சம்பந்தப்பட்ட நாளில் அந்த ஊரில் உள்ள நபர்களைத் தவிர வேறு ஊரைச் சேர்ந்தவர்கள் செல்ல வேண்டாம்.

வறட்சி நிவாரணமாக ஒவ்வொரு விவசாயிக்கும் மொத்தம் எவ்வளவு ரூபாய் வழங்கப்படும் என்ற விவரம் கூட்டுறவு சங்க நோட்டீஸ் போர்டிலும் கிராம நிர்வாக அலுவலகத்திலும் ஒட்டப்பட்டுள்ளது. விவசாயிகள் தங்கள் ஊருக்கு ஒதுக்கப்பட்ட நாளில் 2 ஸ்டாம்ப் அளவு புகைப்படத்துடன் சென்று பணத்தை சரிபார்த்துப் பெற்றுக் கொள்ளலாம்.

கூட்டுறவு சங்கத்தில் கணக்கு இல்லாத விவசாயிகள் உடன் கணக்கு தொடங்கவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் விவரங்களுக்கு விவசாயிகள் தங்கள் பகுதி கிராம நிர்வாக அலுவலர் மற்றும் கூட்டுறவு சங்கச் செயலாளர் ஆகியோரை தொடர்பு கொள்ளுமாறு அச்செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விவசாயிகளுக்கு வேளாண் கருவிகளை அதிகளவில் வழங்கக் கோரிக்கை**

வேளாண்மைப் பொறியியல் துறை சார்பில் மானிய விலையில் அளிக்கப்படும் வேளாண் கருவிகளை அதிக எண்ணிக்கையில் வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவிநாசி வேளாண்மைத் துறை உழவர் பெருவிழா நிறைவு நிகழ்ச்சி தத்தனூர் ஊராட்சி கூட்டப்பள்ளி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க வளாகத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது . உதவி வேளாணமை இயக்குநர் (பொ) ரா.செல்வன், ஊராட்சித் தலைவர் திலகவதி, கூட்டுறவு சங்கத் தலைவர் நடராஜ் ஆகியோர் தலைமை வகித்தனர்.

விழாவில் பங்கேற்ற விவசாயிகள் கூறியது: மானிய விலையில் வழங்கப்படும் விவசாய கருவிகளை அதிக எண்ணிக்கையில் அளிக்க வேண்டும். மானிய விலையில் கருவிகள் கோரி விண்ணப்பிக்கும் விவசாயிகளின் மனுக்களை உடனடியாக பரிசீலனைக்கு வேளாண்மை பொறியியல் துறையினர் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றனர்.

இதுகுறித்து வேளாண்மைத் துறை அலுவலர்கள் கூறியது: அரசு ஒதுக்கீடு செய்யும் கருவிகளை தகுதி வாய்ந்த விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கி அளிக்கிறோம் என்றனர். நிறைவாக உடுமலை மதன் குழுவைச் சேர்ந்த வாசுகி, மணி ஆகியோரின் கிராமிய இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 29.42**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை நிலவரப்படி 29.42 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 28 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 200 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 1.11 டி.எம்.சி.

**சிறு விவசாயிகள் சங்கம் துவக்கம்**

கோத்தகிரியில் நாக்குபெட்டா சிறு விவசாயிகள் சங்கம் என்ற பெயரில் விவசாயிகளுக்கான புதிய அமைப்பின் துவக்க விழா சங்கக் கட்டடத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது.

நீலகிரி மாவட்ட சிறு தேயிலை விவசாயிகள், காய்கறி உற்பத்தியாளர் கள், கொய்மலர் சாகுபடியாளர்கள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் ஆகியோருக்கு உதவும் வகையில் அரசிடமிருந்து கல்வி, விவசாயத்துக்கான நேரடி மானியம், இடுபொருள் மானியம் ஆகியவற்றை பெற்றுத்தரும் இயக்கமாக செயல்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

சங்கத்தின் புதிய தலைவராக காரிதாசன், துணைத் தலைவராக கொணவக்கரை சிவகுமார், பொதுச் செயலராக ஜக்கலோடை சிவகுமார், துணைச் செயலராக திம்பட்டி சேகர், பொருளாளராக அணையட்டி தேவராஜ் உள்ளிட்டோர் பொறுப்பேற்றனர்.

சங்கத்தில் உறுப்பினராக சேர விரும்பும் விவசாயிகள் 95858-86693 என்ற அலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**வயலூரில் உழவர் பெருவிழா**

கீழ்பென்னாத்தூரை அடுத்த வயலூர் கிராமத்தில் வியாழக்கிழமை உழவர் பெருவிழா நடைபெற்றது.

ஊராட்சித் தலைவர் எம்.சதாசிவம் தலைமை வகித்தார். வேளாண்மை உதவி இயக்குநர் அக்கண்டராவ், துணை வேளாண்மை இயக்குநர் (வேளாண் விற்பனைத் துறை) பாலகிருஷ்ணன், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) அனுராதா ஆகியோர் அதிக மகசூல் பெறுவதற்கான வேளாண் தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர். வேளாண் கண்காட்சியும் அமைக்கப்பட்டிருந்தது.

நிகழ்ச்சியில், தோட்டக்கலைத் துறை, பட்டு வளர்ச்சித் துறை, கால்நடை பராமரிப்புத் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் அதிகாரிகள் கலந்துகொண்டு விவசாயிகளின் சந்தேகங்களுக்கு விளக்கம் அளித்தனர்.

**பருத்தி ஏலம்: வரத்து குறைவு**

அறுவடை சீசன் முடிந்ததால் நாமக்கல் கூட்டுறவு வேளாண் விற்பனை நிலையத்தில் நடைபெற்ற பருத்தி ஏலத்துக்கு குறைவான மூட்டைகளே வரப்பெற்றன.

நாமக்கல் கூட்டுறவு விற்பனை நிலையத்தில் வாரம் தோறும் வியாழக்கிழமை பருத்தி ஏலம் நடைபெறுகிறது. இங்கு, நாமக்கல் மாவட்டம் மட்டுமன்றி சேலம், திருச்சி, துறையூர் உள்ளிட்ட பல பகுதிகளிலிருந்தும் பருத்தி மூட்டைகள் வரப் பெறுகின்றன.

இந்த வாரம் நடைபெற்ற ஏலத்துக்கு சுமார் ஆயிரம் மூட்டைகள் பருத்தி மட்டுமே கொண்டு வரப்பட்டன. அவற்றில், ஆர்சிஹெச் ரகம் குவிண்டால் ரூ.4400 முதல் ரூ.4700 வரையும், டிசிஹெச் ரகம் குவிண்டால் ரூ.4800 முதல் ரூ.5200 வரையும் விலை போனது. மொத்தம் ரூ.20 லட்சத்துக்கு பருத்தி ஏலம் நடைபெற்றது.

அறுவடை சீசன் முடிந்ததால் பருத்தி வரத்து குறைந்திருப்பதாகவும், ஜூன் மாதம் முதல் வரத்து அதிகமாக இருக்கும் என்றும் கூட்டுறவு அலுவலர்கள் தெரிவித்தனர்.

**ஆங்கிலத்தில் வறட்சி நிவாரண பெயர்ப் பட்டியல்**

ராசிபுரம் பகுதியில் வறட்சி நிவாரணம் பெறும் விவசாயிகள் பெயர்ப் பட்டியல் ஆங்கிலத்தில் இடம் பெற்றுள்ளதால், விவசாயிகள் குழப்பமடைந்துள்ளனர்.

தமிழகம் முழுவதும் வறட்சிப் பகுதிகள் கணக்கெடுக்கப்பட்டு, விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்பட்டு வருகின்றன. மானாவரி பயிர், இரவை பயிர் என கணக்கிட்டு இந்த நிவாரணத்

தொகை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலம், விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும்.

நாமக்கல் மாவட்டத்தில் நிவாரணம் பெறக்கூடிய விவசாயிகளின் பெயர் பட்டியல் அந்தந்த தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் ஒட்டப்பட்டுள்ள நிலையில், அனைத்து பெயர்களும் ஆங்கிலத்தில் உள்ளதால், அதைப் பார்க்கும் விவசாயிகளுக்கு குழப்பம் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து, தமிழ்செல்வன் என்ற விவசாயி கூறியது:

ஒரே ஊரில் பலர் ஒரே பெயர் கொண்டுள்ளனர். தந்தையின் பெயர் குறிப்பிடாமல் விவசாயிகள் பெயர் மட்டும் இடம் பெறும் வகையில் பட்டியல் வைக்கப்பட்டுள்ளதால், குழப்பம் ஏற்பட்டுள்ளது. இந்தப் பட்டியலை கிராமப்புற விவசாயிகள் புரிந்து கொள்ளும் வகையில் தமிழில் வைக்க சம்பந்தப்பட்ட துறையினர் ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் அவர் கூறினார்.

**வேளாண் பொருள் குறித்த விழிப்புணர்வுப் பேரணி**

நாமகிரிப்பேட்டையில் பாரம்பரியம் மிக்க வேளாண் பொருள்களான இளநீர், சீகக்காய், பருத்தி ஆகியவற்றின் பயன்பாடு குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், வியாழக்கிழமை பேரணி நடைபெற்றது.

பேரணியை நாமகிரிப்பேட்டை ஒன்றிய குழுத் தலைவர் இ.கே.பொன்னுசாமி தொடக்கி வைத்தார். நாமகிரிப்பேட்டை வேளாண் உதவி இயக்குநர் எஸ்.மனோகரன் தலைமை வகித்தார். பேரணியில் இளநீர், சீகக்காய், பருத்தி போன்றவற்றின் முக்கியத்துவம் குறித்த தட்டிகளை ஏந்தியவாறு பள்ளி மாணவ, மாணவிகள், மகளிர் குழுவினர், விவசாயிகள் மற்றும் துறை அலுவலர்கள் சென்றனர்.

**பாசனத்துக்கு குறித்த நாளில் தண்ணீர் திறப்பது சாத்தியமில்லை**

காவிரி டெல்டா மாவட்டங்களின் பாசனத் தேவைக்காக, நிகழாண்டிலும் மேட்டூர் அணையிலிருந்து குறித்த நாளில் தண்ணீர் திறக்கப்படுவதற்கான வாய்ப்புகள் குறைந்துள்ளதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

பருவமழை பெய்யாததாலும், காவிரியில் கர்நாடகம் தண்ணீர் திறந்துவிடாததாலும் மேட்டூர் அணை வறண்டு போனது. இதனால், குறுவை, சம்பா நெல் சாகுபடிக்காக குறிப்பிட்ட காலத்தில் டெல்டா மாவட்டங்களுக்கு தண்ணீர் திறக்க முடியாத சூழல் உருவானது.

மேட்டூர் அணையின் நீர் இருப்பைப் பொருத்து ஆண்டுதோறும் ஜூன் 12-ஆம் தேதி முதல் ஜனவரி 28-ஆம் தேதி வரை டெல்டா மாவட்டங்களின் பாசனத் தேவைக்கு தண்ணீர் திறக்கப்படும்.

இதன் மூலம், திருச்சி, தஞ்சை, திருவாரூர், நாமக்கல், ஈரோடு உள்ளிட்ட 11 மாவட்டங்களில் 16.05 லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. இந்தப் பாசனத் தேவைக்கு மொத்தம் 320 டிஎம்சி தண்ணீர் தேவை.

கடந்த ஆண்டு அணையில் போதிய தண்ணீர் இல்லாததால், குறிப்பிட்ட காலத்தில் தண்ணீர் திறக்க முடியாத சூழல் உருவானது. இதனால், மூன்று மாதம் தாமதமாக 2012, செப்டம்பர் 17-இல் பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டது. அப்போது, அணையின் நீர்மட்டம் 84.42 அடியாகவும், கொள்ளளவு 46.50 டிஎம்சியாக இருந்தது.

தொடர்ந்து அணைக்கு நீர்வரத்து இல்லாததால், குறிப்பிட்ட காலத்துக்கு முன்னதாகவே அணை மூடப்பட்டது.

இந்த நிலையில், நிகழாண்டு மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைவாக உள்ளதால், குடிநீர்த் தேவைக்கு மட்டும் வினாடிக்கு 600 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்படுகிறது. அணையில் நீர் இருப்பு 4.43 டிஎம்சி மட்டுமே உள்ளது.

இதனால், நிகழாண்டு டெல்டா மாவட்டங்களின் பாசனத் தேவைக்காக மேட்டூர் அணையிலிருந்து குறித்த காலத்தில் தண்ணீர் திறந்துவிட முடியாத நிலை உருவாகியுள்ளது. வழக்கமான நாளில் (ஜூன் 12) அணையியிருந்து தண்ணீர் திறந்துவிட சில வாரங்களே உள்ள நிலையில், தற்போது அணை வறண்டு காணப்படுகிறது.

இதனால், டெல்டா மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**பாரம்பரிய வேளாண் பொருள்கள் குறித்த விழிப்புணர்வுப் பேரணி**

பாரம்பரிய வேளாண்மைப் பொருள்களின் மகத்துவத்தை வலியுறுத்தி, திருவெறும்பூரில் அண்மையில் விழிப்புணர்வுப் பேரணி நடைபெற்றது.

பாரம்பரிய பொருள்களின் மகத்துவம் குறித்து மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று தமிழக முதல்வர் உத்தரவிட்டதையடுத்து, திருவெறும்பூர் பகுதியில் திருவெறும்பூர் வட்டார வேளாண்மை விரிவாக்க மையம் சார்பில், அரசு தொழிற்பயிற்சி மைய மாணவர்களுடன் இணைந்து விழிப்புணர்வுப் பேரணி நடத்தப்பட்டது.

திருவெறும்பூர் பேருந்து நிலையத்தில் அரசு கலைக் குழுவினர்களுடன் தொடங்கிய இந்தப் பேரணி அரசு தொழிற்பயிற்சி மையம், கணேசபுரம் ரவுண்டானா வழியாக வேளாண்மை விரிவாக்க மையத்தில் நிறைவடைந்தது.

பேரணியின்போது, மாணவர்கள் பாரம்பரியமிக்க வேளாண் பொருள்களான இளநீர், சீயக்காய், பருத்தி போன்றவற்றின் விளம்பரப் பதாகைகளை ஏந்திச் சென்றனர்.

பேரணியை வேளாண்மை இணை இயக்குநர் ஜெ. சேகர், வேளாண்மை இணை இயக்குநர் (மத்திய திட்டங்கள்) ஆர். சந்திரசேகரன், வேளாண்மை இணை இயக்குநர் (மாநில திட்டங்கள்)

பிரேமா, திருவெறும்பூர் ஒன்றியக் குழுத் தலைவர் எம். செல்வி ஆகியோர் கொடியசைத்து தொடக்கிவைத்தனர். நிகழ்ச்சியின்போது, திருவெறும்பூர் வட்டாட்சியர் சிவசுப்பிரமணியன் மற்றும் திருவெறும்பூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை திருவெறும்பூர் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தின் உதவி இயக்குநர் கு. சரவணன் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

**வறட்சி: கள ஆய்வு செய்து கணக்கெடுக்க வலியுறுத்தல்**

புதுக்கோட்டை மாவட்டம் முழுவதும் வறட்சியால் ஏற்பட்டுள்ள சேத விவரங்களை கிராம நிர்வாக அலுவலர்கள் மூலம் கள ஆய்வு செய்து கணக்கெடுக்க வேண்டுமென மாவட்ட கட்சி சார்பற்ற விவசாயிகள் மேம்பாட்டுச் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

புதுக்கோட்டையில் வியாழக்கிழமை மாவட்டத் தலைவர் ரெ. சிவசாமி தலைமையில் நடைபெற்ற அச்சங்கத்தின் மாவட்டக் குழுக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட இதர தீர்மானங்கள்:

அழிவின் விளிம்பில் உள்ள விவசாயத்தைக் காப்பாற்ற மத்திய, மாநில அரசுகள் தனி வாரியம் அமைத்து, தனி நிதிநிலை அறிக்கை வெளியிட வேண்டும்.

விவசாய மின் இணைப்புக்காக காத்திருக்கும் விவாசாயிகளுக்கு தாமதமின்றி மின் இணைப்பு வழங்க வேண்டும். 60 வயது நிரம்பிய விவசாயிகள் அனைவருக்கும் ஓய்வூதியம் வழங்க வேண்டும். கொள்ளிடம் உபரி நீர்த் திட்டத்தை புதுக்கோட்டை மாவட்டத்தில் செயல்படுத்த வேண்டும். ஆக்கிரமிப்புகளை அகற்றி வரத்து வாய்க்கால்களை ஆழப்படுத்த வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாவட்டச் செயலர் சி. அப்பாவுபாலாண்டார், பொருளாளர் எஸ்.ஏ. செங்கோலுடையார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

**மேட்டூர் அணை நீர்மட்டம்: 21.08 அடி**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை மாலை 21.08 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 161 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 496 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

**தேவையூர் கிராமத்தில் உழவர் பெருவிழா**

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம் தேவையூர் கிராமத்தில் உழவர் பெருவிழா வேளாண் உதவி இயக்குநர் கீதா தலைமையில் புதன்கிழமை நடைபெற்றது.

ஊராட்சித் தலைவர் முத்தையன் முன்னிலை வகித்தார்.

விழாவில், தோட்டக் கலைத்துறை உதவி அலுவலர் மூர்த்தி, தோட்டக்கலைத்துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள், தோட்டக்கலை பயிர்களான காய்கறி பயிர்களை சாகுபடி செய்யும் தொழில் நுட்பங்கள் குறித்தும், கால்நடை மருத்துவர் அஞ்சலி, கால்நடைகள் வளர்ப்பு,

தீவன உற்பத்திக்கு அரசு வழங்கும் மானிய திட்டங்கள், மாடுகளுக்கு செயற்கை கருவூட்டல், கோடைகாலத்தில் மாடுகளைப் பராமரிக்கும் முறை குறித்தும், இளநிலைப் பொறியாளர் அசோக்குமார் வேளாண் பொறியியல் துறை மூலம் வழங்கப்படும் திட்டங்கள் குறித்தும், வேளாண் வணிகத்துறை உதவி வேளாண் அலுவலர் வெங்கடேசன் வேளாண் பொருள்களை மதிப்பு கூட்டி விற்பனை செய்யும் முறை, ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் விற்பனை செய்யும் முறை குறித்தும் விளக்கினர்.

விழாவில், 100-க்கும் மேற்பட்ட விவசாயிகள் மற்றும் உதவி வேளாண் அலுவலர்கள் செப்ந்தர்ராசு, அட்மா திட்ட அலுவலர்கள் கல்யாணசுந்தரம், மாரிமுத்து உள்பட பலர் கலந்து கொண்டனர்.

உதவி வேளாண் அலுவலர் செல்வராசு நன்றி கூறினார்.

**தீவன சோள விதைகளை மானியத்தில் பெறலாம்**

பெரம்பலூர் மாவட்டத்தில் வறட்சியால் கால்நடைகளுக்கு ஏற்பட்டுள்ள தீவன பற்றாக்குறையைத் தடுக்க கால்நடை பராமாரிப்புத் துறை மூலம் மானியத்தில் தீவன சோள விதைகள் பெற விண்ணப்பிக்கலாம்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது வெளியிட்ட செய்திக்குறிப்பு:

கால்நடைகளின் வறட்சி காலத் தீவனப் பற்றாக்குறையைத் தடுக்க பல்வேறு தீவன அபிவிருத்தி திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

அதன்படி நிலம் தயார் செய்தல், விதைகள் மற்றும் உரங்கள் வாங்குதல், தீவனம் பயிர் செய்தல், பின்நேர்த்திப் பணியான களையெடுத்தல், நீர் பாய்ச்சுதல் உள்ளிட்ட பணிகளுக்காக மானியம் வழங்கி தீவன உற்பத்தியைப் பெருக்கி, அதன் மூலம் பால் உற்பத்தியை அதிகரிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பெரம்பலூர் மாவட்டத்தில் ஒரு பயனாளிக்கு 0.50 ஏக்கர் வீதம் 2,000 பயனாளிகளுக்கு 1,000 ஏக்கரில் தீவனப் பயிர் வளர்க்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதில் நிலம் தயார் செய்ய, தீவன விதை வாங்க, விதை விதைத்தல், உரமிடுதல், களையெடுத்தல், தண்ணீர் பாய்ச்சுதல் பணிக்கு (0.50 ஏக்கருக்கு) ரூ. 3400 மானியமாக வழங்க ரூ. 68 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் பயனாளிகளிடம் நீர்பாசன வசதி இருக்க வேண்டும்.

0.50 ஏக்கரில் கட்டாயம் பயிர் செய்திருப்பதோடு, விதையை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும்.

எனவே, கால்நடை வளர்க்கும் விவசாயிகள் தங்களது கிராமத்திற்கு அருகிலுள்ள கால்நடை மருந்தக கால்நடை உதவி மருத்துவர்கள் மற்றும் வேளாண் அலுலவர்களை அணுகி விண்ணப்பிக்கலாம்.

**மானியத்தில் தீவன சோள விதைகள் பெற விண்ணப்பிக்கலாம்**

பெரம்பலூர் மாவட்டத்தில் வறட்சியால் கால்நடைகளுக்கு ஏற்பட்டுள்ள தீவன பற்றாக்குறையை தடுக்க கால்நடை பராமாமிப்புத்துறை மூலம் மானியத்தில் தீவன சோள விதைகள் பெற விண்ணப்பிக்கலாம் என்றார் மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

கால்நடைகளின் வறட்சி கால தீவன பற்றாக்குறையை தடுக்க பல்வேறு தீவன அபிவிருத்தி திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி நிலம் தயார் செய்தல், விதைகள் மற்றும் உரங்கள் வாங்குதல், தீவனம் பயிர் செய்தல், பின்நேர்த்தி பணியான களையெடுத்தல், நீர்பாய்ச்சுதல் உள்ளிட்ட பணிகளுக்காக மானியம் வழங்கி தீவன உற்பத்தியை பெருக்கி, அதன் மூலம் பால் உற்பத்தியை அதிகரிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பெரம்பலூர் மாவட்டத்தில் ஒரு பயனாளிக்கு 0.50 ஏக்கர் வீதம் 2,000 பயனாளிகளுக்கு 1,000 ஏக்கரில் தீவன பயிர் வளர்க்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் நிலம் தயார் செய்ய, தீவன விதை வாங்க, விதை விதைத்தல், உரமிடுதல், களையெடுத்தல், தண்ணீர் பாய்ச்சுதல் பணிக்கு (0.50 ஏக்கருக்கு) ரூ. 3400 மானியமாக வழங்க ரூ. 68 லட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் பயனாளிகளிடம் நீர்பாசன வசதி இருக்க வேண்டும். 0.50 ஏக்கரில் கட்டாயம் பயிர் செய்யதிருப்பதோடு, விதையை முழுமையாக பயன்படுத்த வேண்டும். எனவே, கால்நடை வளர்க்கும் விவசாயிகள் தங்களது கிராமத்திற்கு அருகில் உள்ள கால்நடை மருந்தக கால்நடை உதவி மருத்துவர்கள் மற்றும் வேளாண் அலுலவர்களை அனுகி விண்ணப்பிக்க வேண்டும் என்றார் அவர்.

தினமலர்

**உழவர் பெருவிழாக்களால் விவசாயிகளுக்கு பயனில்லை?ஆர்வம் இல்லை என அதிகாரிகள் புகார்**

உழவர் பெருவிழா என்கிற பெயரில், அரசு பணம் வீணடிக்கப்படுவதாகவும், இவ்விழாவால் எந்த பயனும் இல்லை என்றும் விவசாயிகள் புகார் கூறி வருகின்றனர். அதே வேளையில், விழாக்களில் வழங்கப்படும், புதிய தொழில்நுட்பங்களை அறிந்து கொள்ள, விவசாயிகள் ஆர்வம் காட்டுவதில்லை என, அதிகாரிகள் குற்றம் சாட்டி உள்ளனர். நிதி ஒதுக்கீடு காஞ்சிபுரம் மாவட்டத்தில், 1,045 வருவாய் கிராமங்கள் உள்ளன. ஒரு கிராமத்திற்கு உழவர் பெருவிழா நடத்துவதற்கு, 25 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கப் படுகிறது. இந்த வகையில், காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு மட்டும், ஆண்டுக்கு, 2.61 கோடி ரூபாய் செலவிடப் படுகிறது. புதிய தொழில்நுட்பங்களை விவசாயிகள் தெரிந்து கொள்ளும் வகையில் பயிற்சிகள் தரவும், வேளாண் இடுபொருட்கள் மற்றும் கருவிகள் வழங்கவும் வேளாண் துறை அதிகாரிகளுக்கு ஒரு வாய்ப்பாக அமையும் என்ற கருத்தில், கிராமம் தோறும் இவ்விழா நடத்தப்படுகிறது. மேலும், விவசாயிகளை இவ்விழாவில் பங்கு பெற ஆர்வப்படுத்தும் நோக்கில், கலை நிகழ்ச்சிகளும், அறுசுவை உணவு வகைகளும் ஏற்பாடு செய்யப்படுகின்றன. இந்த விழாக்களுக்கு, சராசரியாக 150 முதல் 200 பேர் வருகின்றனர். தொடக்க விழா உரைகள் முடிந்து, இடுபொருட்கள் வழங்கப்பட்ட பின், சாப்பாடு சாப்பிட்டுவிட்டு பெரும்பாலானோர் கிளம்பி விடுகின்றனர். பயிற்சிக்கு 15 பேர் கூட வருவதில்லை. இதனால், அரசின் நோக்கம் உழவர் பெருவிழாக்களில் நிறைவேறுவதில்லை. "அரசியல் ஆதிக்கம்' விவசாயத்திற்கான அடிப்படை நீராதரங்களே அழிந்து வருகின்ற இந்த நேரத்தில், இந்த விழாக்களால் பயனில்லை என்றும், அரசியல் பிரமுகர்களுக்கு மட்டும் விழாக்களில் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது என்றும் விவசாயிகள் கூறுகின்றனர். இது குறித்து, வில்லிவலம் கிராமத்தை சேர்ந்த விவசாயி, கிருஷ்ணன் கூறுகையில், ""இந்த விழாவினால், விவசாயிகளுக்கு எவ்வித பயனும் இல்லை. ஆளும் கட்சியை சேர்ந்த உறுப்பினர்களுக்கு மட்டுமே வேளாண் இடுபொருட்கள், வேளாண் கருவிகள் உள்ளிட்ட பொருட்களை மேடையில் வழங்குகின்றனர். உண்மையான விவசாயிக்கு, வேளாண் இடுபொருட்கள் கிடைப்பது அரிதாக உள்ளது. உணவு மட்டுமே கிடைக்கிறது,'' என்றார்.

நெல்லிக்குப்பம் கிராமத்தை சேர்ந்த விவசாயி, கெஜராஜன் கூறுகையில், ""உரிய கால இடைவெளிவிட்டு, நடத்தப் படுவதில்லை. அப்படி நடத்தினால் விவசாயிகள் ஆர்வமாக பங்கேற்பார்கள். இதனை பகல் நேரத்தில் நடத்துவதற்கு பதில், மாலை நேரங்களில் நடத்தினால் கூடுதல் பலன் கிடைக்கும்," என்றார். "அடிப்படையே இல்லை' மண்ணூர் கிராமத்தை சேர்ந்த விவசாயி, பழனி கூறுகையில், ""விவசாயம் செய்ய ஏரியில் தண்ணீர் இல்லை. கடந்த இரண்டு ஆண்டுகளாக, ஏரி நிரம்பவில்லை. ஏரியில், அளவுக்கு அதிகமான மண் எடுக்க அனுமதிக்கப்படுவதால், மதகு வழியாக தண்ணீர் வருவதில்லை. விவசாயம் இல்லாத கிராமத்தில், உழவர் பெருவிழா என்பது, வெறும் கண்துடைப்பாகவே இருக்கிறது," என்றார். மண்ணூர் கிராமத்தை சேர்ந்த விவசாயி, ஏசுதாஸ் கூறுகையில்,""விவசாய நிலங்கள் குறைந்து விட்டன. விவசாயிகள் தினக் கூலி வேலையை தேடி பல்வேறு இடங்களுக்கு செல்கின்றனர். உழவர் பெருவிழாவிற்கு, பல முறை வேண்டி அழைத்தால் மட்டுமே கலந்து கொள்கின்றனர். கிராம மக்களிடம், விழா குறித்த போதிய விழிப்புணர்வு இல்லை. இதனால், விழாவிற்கு வர தயக்கம் காட்டுகின்றனர்," என்றார்.

ஆர்வம் இல்லை இது குறித்து, வேளாண் துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், ""விவசாயம் மட்டுமல்லாது, பல்வேறு துறைகளின் புதிய தொழில்நுட்பத்தை, விவசாயிகள் அறிந்துக் கொள்வதற்காகவே, உழவர் பெருவிழா நடத்தப்படுகிறது. பெரும்பாலான விவசாயிகள் பயிற்சியில் ஆர்வம் காட்டுவதில்லை. இங்கு அளிக்கப்படும் பயிற்சியை முறையாக கவனித்தால், விவசாயிகள், விவசாயம் மட்டுமல்லாது, பிற தொழில்களிலும் வளர்ச்சி பெறலாம்," என்றார். காஞ்சிபுரம் மாவட்டத்தில் இந்த ஆண்டு கடுமையான தண்ணீர் தட்டுப்பாடு நிலவுகிறது. எனவே, அதிகமாக நீர் தேவைப்படும் நெல் பயிரை தவிர்த்து, மாற்று பயிர்களை பயிரிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. மேலும், புதிய தொழில்நுட்பங்கள் மூலம், குறைவான தண்ணீரில் அதிக மகசூல் பெற வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. கிராமங்கள் தோறும் நடத்தப்படும் உழவர் பெரு விழாக்கள் இதற்கு உதவியாக இருக்க வேண்டும். ஆனால், இந்த விழாக்களால் விவசாயிகளுக்கு பயன் இல்லை என்பது தான், பெரும்பாலான விவசாயிகளின் கருத்தாக உள்ளது.

**நவீன தொழில்நுட்பத்தில் விவசாயம் உலக வங்கி அதிகாரிகள் ஆய்வு**

மதுராந்தகம் : நவீன தொழில் நுட்பத்தை, உலக வங்கி அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.உலக வங்கி நிதியுடன் செயல்படும் நீர்வள, நிலவள திட்டத்தினை உலக வங்கி அதிகாரி பால்சித்து தலைமையில் உலக வங்கி குழுவினர் சிறுநகர், பெரிய களக்காடி ஆகிய கிராமங்களில் ஆய்வு

நடத்தினர். அப்போது, திருந்தியநெல்சாகுபடி, நபார்டு உழவர் மன்றம் நீர்வள நிலவளத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட நெல்சாகுபடி முறை, இளநாற்றினை சதுர முறையில் நடவு செய்தல், களை கருவிகளை பயன்படுத்தி களை எடுத்தல் குறித்து, கேட்டறிந்தனர். அவர்களிடம், எவ்வாறு சிக்கன முறையில் தண்ணீரை பயன்படுத்துதல், இயற்கை சார்ந்த உரங்கள் அளித்தல் மூலம் ஒரு ஏக்கரில் 500 முதல் 600 கிலோ வரை கூடுதல் மகசூல் பெறுவது உள்ளிட்டவைகள் குறித்து அதிகாரிகள் விளக்கினர். வேளாண்மை இணை இயக்குனர் உள்ளிட்ட பல்வேறு துறைசேர்ந்த அதிகாரிகள் உடன் இருந்தனர்.

**மழையின்றி கருகும் பாக்குமரம் பயிரிட்ட விவசாயிகள் கவலை**

வாழப்பாடி: வாழப்பாடி பகுதியில் நிலவும் கடும் வறட்சியால், பல ஆண்டுகளாக பராமரித்து வந்த பாக்கு மரங்கள் கருகி வருகின்றன. அதனால், விவசாயிகள் பெரும் கவலையடைந்துள்ளனர். வாழப்பாடி பகுதியில், ஆண்டுதோறும் செப்டம்பர் முதல் ஜனவரி மாதம் வரை, பருவமழை பெய்யும். இந்தாண்டு பருவமழை பொய்த்து போனதால், வாழப்பாடி அடுத்த பாப்பநாயக்கன்பட்டி கரியகோவில் அணை, வெள்ளாறு, புழுதிக்குட்டை ஆணைமடுவு அணை, வசிஷ்டநதி மட்டுமின்றி, அனைத்து நீரோடைகள், ஆறு, குளம், குட்டைகளும், ஏரிகளும், நீர்வரத்தின்றி வறண்டு கிடக்கின்றன.
பருவமழை பொய்த்து, கோடை மழையும் கை கொடுக்காததால், 15 ஆண்டுகளுக்கு பின், வாழப்பாடி பகுதியில், கடுமையான வறட்சி ஏற்பட்டு, நிலத்தடி நீர்மட்டம் அடியோடு சரிந்து விட்டது. அதனால், வாழப்பாடி மற்றும் அதன் சுற்றுப்புற கிராமங்களில், பாசனத்துக்கு பயன்பட்ட விவசாய கிணறுகளும், ஃபோர்வெல்களும் வறண்டு கிடக்கின்றன.
அதனால், வாழப்பாடி பகுதி விவசாயிகள் பயிரிட்டுள்ள, நீண்டகால பலன் தரும் பணப்பயிரான பாக்குமரங்கள், காய்ந்து கருகி வருகின்றன. பல ஆண்டுகளாக தொடர்ந்து பராமரித்து வரும் பாக்குமர தோப்புகள், கருகி வருவதால், பாக்குமரங்களை வெட்டி வீழ்த்த வேண்டிய பரிதாப நிலை, விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது.
வாழப்பாடி, பேளூர், தும்பல், அயோத்தியாப்பட்டணம், ஏத்தாப்பூர், பெத்தநாயக்கன்பாளையம் பகுதியில், நூற்றுக்கணக்கான ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள பாக்கு மரங்கள் காய்ந்து கருகியுள்ளன. அதனால், பாக்குமரங்களை பயிரிட்ட விவசாயிகள் பெரும் கவலையடைந்துள்ளனர். கடும் வறட்சியால் காய்ந்து வரும் பாக்கு மற்றும் தென்னை மரங்கள் குறித்து கணக்கெடுத்து, உரிய நிவாரணம் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என, வாழப்பாடி பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**சேனைக் கிழங்கில் பூ: மக்கள் வியப்பு**

ஆத்தூர்: ஆத்தூரில், சேனைக் கிழங்கு பூ வைத்துள்ளதை, பொதுமக்கள் வியப்புடன் பார்த்துச் செல்கின்றனர். ஆத்தூர் நகராட்சி, 27வது வார்டு, ஜோதி நகரை சேர்ந்த வெங்கடேஷ். அவரது மனைவி கலா, அதே பகுதியில் ஹோட்டல் நடத்தி வருகின்றனர். சில தினங்களுக்கு முன், ஆத்தூர் உழவர் சந்தையில், சேனைக் கிழங்கு வாங்கி வந்தனர். அதில், ஒரு சேனைக் கிழங்கு, இரண்டு அடி உயரத்துக்கு பழுப்பு, மஞ்சள் நிறத்தில் பூ பூத்துள்ளது. சேனை கிழங்கில் பூத்துள்ள பூவினை, அப்பகுதி மக்கள் பார்த்துச் செல்கின்றனர்.

**தென்மேற்கு பருவமழை கை கொடுக்குமா? தர்மபுரி விவசாயிகள் பெரிதும் எதிர்பார்ப்பு**

தர்மபுரி: தென்மேற்கு பருவமழையை தர்மபுரி மாவட்ட விவசாயிகள் எதிர்பார்த்து, மானாவரி சாகுபடிக்கு தயார் ஆகி வருகின்றனர்.
தர்மபுரி மாவட்டத்தில், ஒரு லட்சத்து, 59 ஆயிரம் ஹெக்டர் பரப்பளவில் விவசாயிகள் மானாவாரியாகும், இறைவையிலும் சாகுபடி செய்து வருகின்றனர். குறிப்பாக தென்மேற்கு, வடக்கிழக்கு பருவமழை காலங்களில், விவசாயிகள் மானாவரியாக நிலக்கடலை, பருத்தி, சூரியகாந்தி, மரவள்ளி கிழங்கு, துவரை மற்றும் காராமணி, உளுந்து, கொண்டைகடலை, சோளம், ராகி உள்ளிட்ட பயிர்களை சாகுபடி செய்து வருகின்றனர்.
மாவட்டத்தில் கடந்தாண்டு போதிய தென்மேற்கு, வடக்கிழக்கு பருவமழை பெய்யாததால், மானாவரி பயிர் சாகுபடி பெரிதும் பாதிக்கப்பட்டது. தற்போது, மாவட்டத்தில் கோடை மழையும் போதியளவு பெய்யவில்லை.
இந்நிலையில், தென்மேற்கு பருவ மழையை விவசாயிகள் பெரிதும் எதிர்பார்த்துள்ளனர். அதே நேரம் விவசாயிகள், மானாவரி சாகுபடியை துவங்க உழவு பணிகள் உள்ளிட்ட ஆரம்பட்ட பணிகளை துவங்கியுள்ளனர்.
வேளாண்மை இணை இயக்குனர் மனோகரன் கூறியது:
தென்மேற்கு பருவ மழை துவங்க உள்ள நிலையில் மானாவாரி பயிர்களை சாகுபடி செய்யும் விவசாயிகள் தற்போது தங்களது நிலங்களை ஐந்து கழப்பை கொண்டு உழுவதன் மூலம் முந்தைய சாகுபடியின் போது நிலத்தில் தங்கியிருந்த கூட்டுபுழுக்கள் வெளியேற்றப்பட்டு, இறக்கும். இதனால், புதிதாக சாகுபடி செய்யும் பயிர்கள் காக்கப்படும். மேலும் மழையின் போது நிலத்தின் ஈரத்தன்மை பாதுகாக்கப்படும். ஒரு ஏக்கருக்கு விவசாயிகள், ஐந்து டன் தொழு உரம் இடவேண்டும்.
போதிய தொழு உரம் கிடைக்காத விவசாயிகள், 300 கிலோ தொழுஉரத்துடன், நான்கு கிலோ மணிசத்து, 25கிலோ சூப்பர் பாஸ்பேட் ஆகியவற்றை தண்ணீருடன் சேர்த்து கலக்க வேண்டும்.

இந்த கலவை விவசாயிகள், 15 நாட்கள் மூடாக்கு போட்டு வைக்க வேண்டும். பின் மீண்டும் இக்கலைவைலை தண்ணீர் சேர்த்து கலக்கி, மீண்டும், 15 நாட்கள் மூடாக்கு போடவேண்டும். 30 நாட்கள் மூடாக்கு போடப்பட்ட, 340 கிலோ தொழுஉரம் கலவை, ஐந்து டன் தொழுஉரத்திற்கு சமமான பயிர்களுக்கு தேவையான ஊட்டசத்துக்களை வழங்கும்.
மேலும், விசாயிகள் மானாவாரி பயிர்களுடன் பிற பயிர்களை ஊடுபயிராக சாகுபடி செய்வதன் மூலம் களை கட்டுப்படுத்துதல், மற்றும் ஒரு பயிருக்கான சாகுபடி செலவில், கூடுதல் வருமானத்தை பெறமுடியும்.
விவசாயிகள், மானாவாரி சாகுபடி குறித்து அருகில் உள்ள வேளாண் அலுவலங்களில் தங்களுக்கு தேவையான விபரங்கள் மற்றும் மானியங்கள் குறித்த விபரங்களை தெரிந்து கொள்ளலாம். இவ்வாறு கூறினார்.

**வேளாண் பொருட்கள் விழிப்புணர்வு பேரணி**

தர்மபுரி: பென்னாகரம் தாலுகா, கடைமடை கிராமத்தில் நடந்த உழவர் பெருவிழாவில், வேளாண் பொருட்களை பயன்படுத்த வலியுறுத்தி, விழிப்புணர்வு பேரணி நடந்தது.
தோடக்கலை துறை உதவி இயக்குனர் முகுந்தன் விழாவை துவக்கி வைத்தார். வேளாண் இணை இயக்குனர் மனோகரன் தலைமை வகித்து பேசியதாவது:
தற்போதைய சூழ்நிலையில் விவசாயிகள் நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தினால் மட்டுமே, உற்பத்தியை அதிகரிக்க முடியும். விவசாயிகள் கண்டிப்பாக புதிய யுத்திகளை கடைப்பிடித்து உற்பத்தியை அதிகரிக்க முயற்சிக்க வேண்டும். மேலும், சொட்டு நீர் பாசனம், நீடித்த நிலையான கரும்பு சாகுபடி, திருந்திய நெல் சாகுபடி, துவரையில் நாற்று நடும் முறை போன்ற தொழில் நுட்பங்களை விவசாயிகள் தவறாமல் கடைப்பிடிக்க வேண்டும். இவ்வாறு பேசினார்.
பாப்பாரப்பட்டி வேளாண் அறிவியல் மைய சங்கீதா, கோதுமை சாகுபடியில் நவீன தொழில் நுட்பங்கள் குறித்து விளக்கினார். வேளாண் செயற்பொறியாளர் அறிவழகன் விவசாயிகளின் கேள்விகளுக்கு பதில் அளித்தார். வேளாண் பொருட்களை மக்கள் பயன்படுத்த வலியுறுத்தி, விழிப்புணர்வு பேரணி நடந்தது.
ஏற்பாடுகளை வட்டார தொழில் நுட்ப மேலாளர் சரவணன், கணபதி, உதவி வேளாண் அலுவலர்கள் முருகேஷ், பன்னீர், மாதேஸ் மற்றும் பெரியசாமி, மாதப்பன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**விதை பரிசோதனை செய்ய விவசாயிகளுக்கு அறிவுரை**

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கோடையில் சாகுபடி செய்யும் விவசாயிகள் விதைகளை தவறாமல் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும் என்று கிருஷ்ணகிரி விதை

பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் ஜான் லூர்து சேவியர் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:
கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தற்போது விவசாயிகள் கம்பு, எள் மற்றும் வீரிய மக்காச்சோளம் போன்றவற்றை சாகுபடி செய்யவுள்ளனர். இவ்வாறு சாகுபடி செய்யும் போது விதைகள் தரமானதுதானா என விவசாயிகள் அறிந்து சாகுபடி செய்ய வேண்டும். மேலும் விதைகளை வாங்கும் முன்பு அந்த விதைகளுக்கு உரிய முளைப்பு திறன் பகுப்பாய்வறிக்கையினை கேட்டு சரிபார்க்கவும்.
விதைகளின் தரத்தினை அறிந்துக்கொள்ள கிருஷ்ணகிரி நகரில் மோகன்ராவ் காலனி முதல் குறுகுத்தெருவில் விதை பரிசோதனை நிலையம் செயல்பட்டு வருகிறது. இந்நிலையத்தில் சான்று விதை மாதிரிகள், ஆய்வாளர் விதை மாதிரிகள் மற்றும் பணிவிதை மாதிரிகள் பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
எனவே, அனைத்து விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனையாளர்கள் மற்றும் விவசாயிகள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி ஒரு பணி விதை மாதிரிக்கு பரிசோதனை கட்டனமாக, 30 ரூபாய் செலுத்தி விதைகளின் தரத்தினை அறிந்து தரமான விதைகளை பயன்படுத்தி சாகுபடி செய்து பயன்பெறலாம்.
இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**வாழையின் ஊடுபயிராக செண்டுமல்லி கிணற்று பாசன விவசாயிகள் உற்சாகம்**

கோபிசெட்டிபாளையம்: கோபி சுற்று வட்டாரத்தில் கிணற்று பாசனத்தில் வாழையில் ஊடுபயிராக செண்டுமல்லி பயிரிடப்பட்டுள்ளது.
கோபி பாசன பகுதிகள் வறண்டு காணப்படுவதால், தோட்டக்கலை பயிர்களான காய்கறிகளை விவசாயிகள் பயிரிடுகின்றனர். கத்தரிக்காய், வெண்டை, தக்காளி, பாகற்காய், காலிஃப்ளவர், புடலை, சின்ன வெங்காயம், பூசணி வகைகள், முள்ளங்கி, கீரை வகைகள் மற்றும் பூ வகைகளுக்கு விவசாயிகள் மாறியுள்ளனர். கோபி, நம்பியூர் மற்றும் டி.என்.பாளையம், அளுக்குளி உள்ளிட்ட பகுதிகளில், வாழையில் ஊடு பயிராக செண்டு மல்லிகைப்பூ பயிரிடப்பட்டது. 90 நாட்கள் பயிராக செண்டு மல்லி, நன்கு விளைச்சலாகி அறுவடைக்கு தயாராகி உள்ளது.
விவசாயிகள் கூறியதாவது: விவசாய கூலி ஆட்கள் பற்றாக்குறை அதிகளவில் உள்ளது. பெண்களுக்கு, 150 முதல், 200 ரூபாய் வரை கூலி கொடுத்தால் கூட, வேலைக்கு வர தயங்குகின்றனர். பல ஆண்டுகளாக விவசாய கூலி வேலை செய்யும் நபர்கள் மட்டுமே, விவசாய கூலி பணி செய்து வருகின்றனர். இளைய தலைமுறையினர் விவசாய பணிக்கு வரவில்லை. விவசாய கூலி ஆட்கள் பற்றாக்குறையால், தோட்டக்கலை பயிர்களாக காய்கறி மற்றும் பூ வகைக்கு மாறி உள்ளோம்.
வாழை மற்றும் மஞ்சளில் செண்டுமல்லி ஊடுபயிராக செய்யலாம். ஒரு கிலோ பாக்கெட் செண்டுமல்லி விலை, 2,000 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு ஒரு கிலோ விதை

பயன்படுத்தலாம். மாதத்தில் இரு முறை மருந்து தெளிக்க வேண்டும். செண்டுமல்லி மூன்று மாத பயிர். அறுவடைக்கு தயாரான பின், எட்டு வாரங்களில் பூ அறுவடை செய்யலாம். பூவில் கரும்பு புள்ளி விழுந்தால், பூ விலை மிகவும் குறைந்து விடும். அறுவடை செய்யப்படும் பூ கம்பெனி மற்றும் பூ மார்க்கெட்டில் விற்பனை செய்கிறோம். மொத்த விலையில் கிலோ, பத்து ரூபாய்க்கு விற்பனை செய்து வருகிறோம். விசேஷ நாட்களில் பூ விலை சற்று அதிகமாக இருக்கும். ஒரு ஏக்கருக்கு எட்டு டன் பூ வரை கிடைக்கும். வாழையில் ஊடுபயிராக பயிரிட்டுள்ளதால், விவசாயிகளுக்கு லாபம் கிடைக்கும். நஷ்ட ஏற்பட வாய்ப்பில்லை, என்றனர்.

**கே.ஆர்.எஸ். அணையிலிருந்து தண்ணீர் வேண்டும் விவசாய குறைதீர் கூட்டத்தில் வலியுறுத்தல்**

கரூர்: ""குடிநீர் பிரச்னை தீர்க்க உதவும் வகையில், கிருஷ்ணசாகர் அணையிலிருந்து, காவிரி ஆற்றுக்கு, 10 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறக்க, முதல்வர் நடவடிக்கை எடுக்க வேண்டும்,'' என விவசாய குறைதீர் கூட்டத்தில், டெல்டா பாசன காவிரி சங்க செயலாளர் ராஜாராம் கூறினார். கரூர் கலெக்டர் அலுவலகத்தில் நேற்று விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடந்தது. இதில், கலெக்டர் ஜெயந்தி தலைமை வகித்தார். வேளாண் இணை இயக்குநர் தெய்வேந்திரன் முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் விவசாய சங்கங்களில் பிரநிதிகள் பேசியதாவது: சுப்பிரமணியன்: மாவட்டத்தில் உள்ள காவிரி பாசனவாய்க்காலை தூர் வார, சிறப்பு ஒதுக்கீடுக்கு, பரிந்துரை செய்ய வேண்டும். உதவிசெயற்பொறியாளர்: (ஆற்றுபாதுகாப்பு உபகோட்டம்) கட்டளை மேட்டு வாய்க்கால், அதன் கிளை வாய்க்கால்களை தூர் வாரி, கட்டுமானங்களை புதுபிக்க, திட்ட மதிப்பீடு அரசு ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ராஜமாணிக்கம்: திரூப்பூர் சாயக்கழிவால் பாதிக்கப்பட்ட நொய்யல் ஆற்று கரையோரம் அமைத்துள்ள விவசாய நிலங்களுக்கு இழப்பீடு தர நடவடிக்கை எடுக்க வேண்டும். பொறியாளர் (மாசுக்கட்டுபாட்டு வாரியம்): இது குறித்து சுற்றுச்சுழல் இழப்பீடு ஆணையத்தின் பரிசீலனைக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டள்ளது. வீரமலை: மேட்டுமருதூரில் பகுதியில் கோரைப்பயிர், வாழைக்கு நிவாரண தொகை வழங்க வேண்டும்.

சௌந்திரவள்ளி(ஆர்.டி.ஓ., குளித்தலை): மேட்டுமருதூரில் கோரைப்பயிரிகள் வறட்சியால் பாதிக்கப்படவில்லை. விரைவில் வாழைக்கு நிவராணத்தொகை வழங்கப்படும். ராஜேஸ்வரி: திம்மம்பட்டியில், மயான கொட்டகை, ரேஷன் கடை கட்டிம் கட்டி தர நடவடிக்கை எடுக்க வேண்டும். பி.டி.ஓ., (குளித்தலை): குளித்தலை எம்.எல்.ஏ., தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் முன்னுரிமை அடிப்படையில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். கலெக்டர் ஜெயந்தி: எம்.ஏல்.ஏ., நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும் என கூற அரசு அதிகாரிகளுக்கு அதிகாரம் கிடையாது. அது எம்.ஏல்.ஏ., தான் ஒதுக்கீடு செய்ய வேண்டும். இனி

பணிகளுக்கு நிதி ஒதுக்கிடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என கூற வேண்டும்.
ராஜாராம் (டெல்டா காவிரி பாசன சங்க செயலாளர்): காவிரி ஆற்று பகுதிகள் முற்றிலும் வறண்டு காணப்படுவதால், நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக குறைந்து விட்டது. இதனால் கர்நாடகத்தில் உள்ள கிருஷ்ணசாகர் அணையில் இருந்து குடிநீருக்காக, 10 ஆயிரம் கன அடி தண்ணீர் திறக்க, தமிழக முதல்வர் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கான கோரிக்கை மனுவை மாவட்ட நிர்வாகத்திடம் அளிக்கப்படும்.
கலெக்டர்: அந்த மனு அரசுக்கு அனுப்பி வைக்கப்படும். இவ்வாறு விவாதம் நடந்தது.

**அடர்நடவு முறை சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி முகாம்**

குளித்தலை: கரூர் வேளாண் அறிவியல் மையம் மற்றும் நபார்டு வங்கி சார்பில், குளித்தலையில் விவசாயி செந்தில்குமார் தோட்டத்தில், வாழையில் அடர்நடவு முறை சாகுபடி குறித்து தொழில்நுட்ப பயிற்சி முகாம் நடந்தது.
முகாமில், வாழையில் அடர்நடவு சாகுபடி மூலம் அதிக வருவாய், விவசாயிகளே விலை நிர்ணயம் செய்யும் முறை, நோய் தடுப்பு முறை, வாழை சாகுபடியில் புதிய தொழில்நுட்பம் குறித்து, தேசிய வாழை ஆராய்ச்சி மைய முதன்மை விஞ்ஞானி குமார் பேசினார்.
மேலும், வாழை சாகுபடியில் புதிய தொழில்நுட்பம் குறித்த விளக்க கையேடு விவசாயிகளுக்கு, தேசிய ஆராய்ச்சி மையத்தில் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.
கரூர் நபார்டு வங்கி துணைபொதுமேலாளர் பார்த்தீபன், தோட்டக்கலை தொழில் நுட்ப வல்லுநர் தனசேகர், வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் திரவியம்உள்பட பலர் பங்கேற்றனர்.

**பம்புசெட் கிணற்றில் தண்ணீர் மாயம்: அதிர்ச்சியில் துவரவயல் விவசாயி**

புதுக்கோட்டை: புதுக்கோட்டை மாவட்டம் கீரனூர் அடுத்த துவரவயல் கிராமத்தைச் சேர்ந்தவர் விவசாயி மணி. இவருக்கு அதே பகுதியில் பம்புசெட் கிணறுடன் கூடிய 5 ஏக்கர் விவசாய விளை நிலம் உள்ளது. இதில், இருபோகம் நெல் சாகுடியும், நெல் அறுவடைக்கு பின் உளுந்து, துவரை போன்ற பயறு வகை பயிர்களும் சாகுபடி செய்வது வழக்கம்.
கடந்த 50 ஆண்டுக்கும் மேலாக விவசாயி மணி பம்புசெட் பாசனத்தின் மூலம் பயிர் சாகுபடி செய்துவருகிறார். இவரைப் போன்று அதே பகுதியில் மேலும் பல விவசாயிகள் பம்புசெட் பாசனத்தின் மூலம் பயிர் சாகுபடி செய்துவருகின்றனர்.
கோடை காலத்தில் நிலத்தடி நீர்மட்டம் குறைவதால் பம்புசெட் கிணறுகளில் தண்ணீருக்கு தட்டுப்பாடு ஏற்படுவது வழக்கம். இதை தவிர்ப்பதற்காக விவசாயிகள் ஒவ்வொருவரும் தங்களுடைய கிணறுகளில் 800 முதல் 1,200 அடி ஆழம்வரை ஆழ்குழாய் கிணறு அமைத்துள்ளனர். இதன்காரணமாக கோடையிலும் அப்பகுதி பம்புசெட் கிணறுகளில் தண்ணீர் மட்டம் குறைந்ததில்லை. விவசாயி மணி தற்போது தனது நிலத்தில் நெல் சாகுபடி செய்துள்ளார்.

இதற்காக ஒரு நாள் விட்டு ஒரு நாள் நீர் பாயச்சுவது வழக்கம். கடந்த 14ம் தேதி தொடர்ந்து 6 மணி நேரம்வரை தண்ணீர் பாய்ச்சியும் அவரது கிணற்றில் தண்ணீர் மட்டம் குறையவில்லை. நேற்று(16ம் தேதி) காலை தண்ணீர் பாய்ச்சுவதற்காக வந்த விவசாயி மணி, பம்புசெட் கிணற்றில் தண்ணீர் இல்லாமல் வறண்டு கிடந்ததை பார்த்து அதிர்ச்சியடைந்தார். அருகில் உள்ள பம்புசெட் கிணறுகளில் தண்ணீர் நிரம்பி வழியும் நிலையில் மணியின் கிணற்றில் மட்டும் தண்ணீர் வற்றியுள்ள சம்பவம் இதர விவசாயிகளையும் நிலைகுலையச் செய்துள்ளது. பம்புசெட் பாசனத்தை நம்பி நெல் சாகுபடி செய்துள்ள விவசாயி மணி, கிணறு வறண்டு விட்டதால் பாசனம் செய்ய முடியாத நிலையில் பயிர்கள் கருகி விடுமோ என அஞ்சிவருகிறார். கிணற்றில் திடீரென்று தண்ணீர் வற்றியதற்கான காரணத்தை கண்டறிவதோடு, மீண்டும் தண்ணீர் ஊற்று எடுப்பதற்கான வழிவகைகளையும் ஆராயவேண்டும் என வருவாய்த்துறையினர் மற்றும் வேளாண் துறையினரிடம் விவசாயி மணி முறையிட்டுள்ளார். துவரவயல் மட்டுமின்றி கீரனூர் சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ள பம்புசெட் கிணறுகளில் இதுபோன்ற மாயமர்ம சம்பவங்கள் அடிக்கடி நடப்பதாக அப்பகுதி விவசாயிகள் தெரிவித்தனர். பூமிக்கடியில் நீரோட்டம் மாறுபடும் போது வறண்டு கிடக்கும் கிணறுகளில் திடீரென்று தண்ணீர் நிரம்பி வழிவதும், தண்ணீர் நிரம்பி வழியும் கிணறுகள் திடீரென்று வறண்டு போவது போன்ற நிகழ்வுகள் அவ்வப்போது நடப்பதாக விவசாயிகள் மேலும் தெரிவித்தனர்.

**இன்று விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

புதுக்கோட்டை: புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் வரும் 17ம் தேதி காலை 10 மணிக்கு நடக்கிறது. கலெக்டர் மனோகரன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் அரசுத்துறை அதிகாரிகள் பங்கேற்று விவசாயிகளின் விவசாயம் தொடர்புடைய கோரிக்கைகளுக்கு பதிலளிக்க உள்ளனர். விவசாயிகள் அனைவரும் கூட்டத்தில் பங்கேற்று தங்கள் கோரிக்கைகளுக்கு தீர்வுகாண முன்வருமாறு மாவட்ட நிர்வாகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

**உடையார்பாளையத்தில் உழவர் பெருவிழா**

உடையார்பாளையம்: உடையார்பாளையம் அருகே உள்ள இடையார் பஞ்சாயத்தில் உழவர் பெருவிழா நடந்தது. விழாவிற்கு பஞ்சாயத்து தலைவர் மணிமேகலை செல்வராஜ் தலைமை வகித்தார். ஜெயங்கொண்டம் வேளாண் உதவி இயக்குனர் இளங்கோவன் சாகுபடி தொழில் நுட்பங்கள், வேளாண் திட்ட மானியங்கள் பற்றி பேசினார். வேளாண் அலுவலர் கலை செல்வி, எலி ஒழிப்பு, கோடை உழவு மண் மாதிரி எடுத்தல் உள்ளிட்ட தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கி பேசினார். தோட்டக்கலை துறை அலுவலர் கலைமணி தொழில்நுட்பத்தில் காய்கறி உற்பத்தி செய்வது குறித்தும் வேளாண் அலுவலர்கள் பொய்யாமொழி, சுப்பிரமணியன் ஆகியோர் நெல்லில் விதை நேர்த்தி செய்தல், மண் மாதி

எடுத்தல் குறித்து செயல்விளக்கம் செய்து காண்பித்தனர். முன்னதாக இயற்கை பொருளான இளநீர், சீகைக்காய், பருத்தி ஆகியவற்றின் பயன்பாடுகள் குறித்து விழிப்புணர்வு பேரணி நடந்தது. இதில் ஏராளமான விவசாயிகள் பங்கேற்றனர். ஏற்பாடுகளை உதவி அலுவலர்கள் கோவிந்தராஜ், முருகன், ஆதிநாராயணன் ஆகியோர் செய்திருந்தனர். உதவி அலுவலர் சௌந்தரராஜன் நன்றி கூறினார்.
* உடையார்பாளையம் அருகே உள்ள வாணதரியன்பட்டிணத்தில் உழவர் பெருவிழா நடந்தது. விழாவிற்கு பஞ்சாயத்து தலைவர் இளமதி தலைமை வகித்தார். ஜெயங்கொண்டம் வேளாண் உதவி இயக்குனர் இளங்கோவன், உடையார்பாளையம் ஆர்.டி.ஓ., கஸ்தூரி, தாசில்தார் குணசேகரன், வேளாண் துணை அலுவல் கலைசெல்வி, பொய்யாமொழி ஆகியோர் பேசினார். கால்நடை பராமரிப்பு துறை சார்பில் உதவி மருத்துவர் அன்பரசன், தோட்ட கலைத்துறை அலுவலர் பெருமாள், தமிழருவி, வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை அலுவலர் நல்லகுமார், வேளாண் பொறியியல் துறை சார்பில் பொறியாளர் கலைமணி ஆகியோர் தங்களது துறை குறித்து விளக்கி பேசினார்.

**குந்தை தாலுகா பகுதியில் உழவர் பெருவிழா நிறைவு**

கும்பகோணம்: கும்பகோணம் தாலுக்கா பகுதியில் நடந்து வந்த உழவர் பெருவிழா நிறைவடைந்தது.
கும்பகோணம் அருகே சுவாமிமலையில் நடந்த உழவர் பெருவிழாவிற்கு வந்தவர்களை கும்பகோணம் வேளாண் கோட்ட வேளாண் அலுவலர் செல்வமணி வரவேற்றார். விழாவில் வேளாண் துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண் பொறியியல் துறை சார்பில், விவசாயிகளுக்கு என்ன பொருட்கள் மானிய விலையில் வழங்கப்படுகிறது?. நவீன விவசாயத்தின் மூலம் குறைவான செலவில் அதிக மகசூல் பெறுவது எப்படி என எடுத்துரைக்கப்பட்டது.
விவசாயத்தில் மூன்று மடங்கு லாபம், இரு மடங்கு மகசூல் என்ற தலைப்பில் விழிப்புணர்வு நாடகமும் நடந்தது. பின்னர் விவசாயிகளுக்கு விதை நெல், உளுந்து ஆகிய இடுபொருட்கள் மானிய விலையில் கும்பகோணம் ஒன்றிய குழு துணைத் தலைவர் சின்னையன் வழங்கினார். இதில் சுவாமிமலை டவுன் பஞ்., துணைத் தலைவர் கல்யாணகுமார், ஒன்றிய குழு உறுப்பினர் செல்லதம்பி, தில்லையம்பூர் ரவிச்சந்திரன். சுவாமிலை டவுன் பஞ்., செயலாளர் ஜெயராமன், வேளாண் துறை அதிகாரிகள் சேதுராமன், ஞானசுந்தர், ராஜதுரை, ஜெயச்சந்திரன், மகேந்திரவர்மன், கார்த்திகா, ஹசீனாபேகம், கலைச்செல்வன், அட்மா திட்ட மேலாளர் கரவர்த்தி, அட்மா திட்ட அலுவலர்கள் இளமதி, கார்த்தி, தோட்டக்கலைத் துறை அதிகாரி குருநாதன்,

வேளாண் பொறியியல் துறை அதிகாரி சோமசுந்தரம், ஒழுங்குமுறை விற்பனை கூட அலுவலர்கள் கணேசன், வீரமணி உள்பட பலர் பங்கேற்றனர்.

**வேதையில் உழவர் பெருவிழா**

வேதாரண்யம்: நாகை மாவட்டம், வேதாரண்யம் பஞ்., யூனியனுக்கு உள்பட்ட ஆதனூர், கடிநெல்வயல், பன்னாள், ஆயக்காரன்புலம் மூன்று மற்றும் நான்கு கிராமங்களில் வேளாண் துறை சார்பில் உழவர் பெருவிழா நடந்தது. இதில், வட்டார வேளாண் உதவி இயக்குனர் சந்திரஹாசன் தலைமை வகித்தார். வேளாண் உதவி அலுவலர் ராமதிலகம் வரவேற்றார். இவ்விழாவில், விவசாயிகளுக்கு மண் மாதிரி, விதைநேர்த்தி தொழில்நுட்பம் குறித்து அலுவலர்கள் விளக்கினர். தோட்டக்கலைத்துறை, பொறியியல்துறை உள்ளிட்ட துறைகள் சார்பில் விவசாய தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கப்பட்டன. இதில், வேதாரண்யம் நிலவள வங்கி தலைவர் சிவானந்தம், பஞ்., தலைவர்கள் விஸ்வநாதன், வெங்கடாசலம், மலர்விழி, மனோகரன் உள்பட பலர் பங்கேற்றனர்.

**முப்பதாயிரம் ஏக்கரில் திருந்திய நெல் சாகுபடி**

கம்பம்:முப்பதாயிரம் ஏக்கரில், விவசாயிகள் திருந்திய நெல் சாகுபடி முறையை பின்பற்ற வேண்டும் என்றால்,தொடக்க விவசாய கூட்டுறவு வங்கிகள் மூலம் விவசாய இயந்திரங்கள் வாடகைக்கு விட வேண்டும், என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். முல்லைப் பெரியாறு பாசனத்தில், கூடலூர் முதல் பழனிசெட்டிபட்டி வரை இருபோகம் மற்றும் ஒருபோக விவசாயம் 53 ஆயிரத்து 250 ஏக்கரில் நடக்கிறது.கடந்த சில ஆண்டுகளாக, "திருந்திய நெல்சாகுபடி' திட்டம் அறிமுகம் செய்யப்பட்டு, விவசாயிகளால் பின்பற்றப்பட்டு வருகிறது. இத் திட்டத்தில், சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, 2 ஆயிரம் ரூபாயும், ஆயிரம் ரூபாய்க்கான இடுபொருள்களும் இலவசமாக வழங்கப்படுகிறது.விவசாயத்துறையினர், போதிய விளம்பரம் செய்யாததால், பெரும்பாலான விவசாயிகளுக்கு இந்த மானியம் பற்றி தெரியவில்லை. சிறப்பு என்ன : இத்திட்டத்தில் நாற்றுகள் ஒரே வரிசையாக நடவு செய்ய வேண்டும். ஒருங்கிணைந்த உரம் மற்றும் பூச்சி மருந்து பயன்படுத்துவது, நோய் எதிர்ப்பு சக்தி கொண்ட விதை, அதிக மகசூல் ஆகியவை சிறப்பு ஆகும்.இருந்த போதும், இந்த முறையை பின்பற்ற பெரும்பாலான விவசாயிகள் மறுத்து வருகின்றனர். 22 ஆயிரத்து 500 ஏக்கரில் திருந்திய நெல் சாகுபடி முறை பின்பற்றப்பட்டுள்ளது. மீதமுள்ள 30 ஆயிரம் ஏக்கரில் பின்பற்றப்படவில்லை,காரணம் என்ன : நடவு செய்ய அதிக கூலி, ஆட்கள் தேவைப்படும். கூடுதல் நேரமாகும். தொழிலாளர் பற்றாக்குறை

உள்ளதால், இம்முறை பயன்படாது' என்கின்றனர் விவசாயிகள். அனைத்து விவசாயிகளும் பின்பற்ற, விவசாயிகளுக்கு "நடவுக்கு இயந்திரங்கள் வாடகைக்கு தர வேண்டும். அவ்வாறு செய்தால் நடவு செலவு குறையும். தொடக்க கூட்டுறவு வங்கிகள் மூலம் நடவு இயந்திரங்கள் வாடகைக்கு விட வேண்டும், என்று விவசாயிகள் கூறுகின்றனர்.

**திருச்சுழியில் உழவர் விழா**

திருச்சுழி:திருச்சுழி, எம். ரெட்டியபட்டி, குல்லம்பட்டி, சித்தலைக்குண்டு கிராமங்களில், உழவர் விழா நடந்தது. ஊராட்சி தலைவர்கள் உத்திரம், ராஜூ தலைமை வகித்தனர். ரெட்டியபட்டி வேளாண் உதவி இயக்குனர் நாச்சியாரம்மாள், தோட்ட கலை துறை உதவி இயக்குனர் ஜெயலட்சுமி, தொழில் நுடப் மேலாளர் பிரேமா முன்னிலை வகித்தனர். வேளாண் உற்பத்தி பொருட்களை அதிகரிக்கவும், புதிய தொழில் நுட்பங்கள் மற்றும் அரசின் திட்ட பணிகள் குறித்து விளக்கப்பட்டது. தொழில் நுட்ப கருத்துகாட்சி நடந்தது. பார்த்தீனியம் செடிகளால் உண்டாகும் நோய்கள், எலி ஒழிப்பு, மண் மாதிரி சேகரம், விதை நேர்த்தி, மண்புழு உரம் தயாரித்தல் செயல் விளக்கம் காண்பிக்கப்பட்டது. விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த கையேடு, இடுபொருட்கள் விறியோகம் செய்யப்பட்டது. கிராமிய கலை நிகழ்ச்சிகள் நடந்தது. வேளாண் அலுவலர் சந்திரசேகரன், உதவி வேளாண் அலுவலர் மோகன்காந்தி, பொறியியல் துறை கோபிநாத் பேசினர். ஏற்பாடுகளை வேளாண்மை அலுவலர்கள் கணேசன், ராமராஜ், செந்தில்குமார், பாலச்சந்தர், பார்வதி, மாரியம்மாள் செய்திருந்தனர்.

**விவசாயத்தில் அதிக அளவு மருந்துகளை பயன்படுத்தினால் உணவுபொருட்கள் நச்சுத்தன்மை அடையும் அதிகாரி பேச்சு**

ஆரணி

தேவைக்கு அதிகமான உரம், மருந்துகளை பயன் படுத்தினால் உணவுதானி யங்கள் நச்சுத்தன்மை அடைகிறது என்று வேளாண்மை அலுவலர் தெரிவித்தார்.

**பயிற்சி வகுப்பு**

திருவண்ணாமலை மாவட் டம் ஆரணி அடுத்த தெள்ளூர் கிராமத்தில் வேளாண்மை துறை சார்பாக அட்மா திட் டத்தின்கீழ் விவசாயிகளுக்கு பண்ணை பயிற்சி வகுப்பு வேளாண்மை உதவி இயக் குனர் செல்வராஜ் தலைமை யில் நடைபெற்றது.

வேளாண்மை அலுவலர் கீதா முன்னிலை வகித்தார். அட்மா வட்டார தொழில் நுட்ப மேலாளர் சுமித்ரா வர வேற்றார். வேளாண்மை உதவி இயக்குனர் செல்வராஜ் கலந்து கொண்டு பேசினார்.

அவர்பேசியதாவது:

**நச்சுத்தன்மை**

தேவைக்குமேல் அதிக அளவு உரம் மற்றும் பூச்சி மருந் துகளை பயிருக்கு பயன்படுத் துவதால் சுற்றுசூழல் பாதிப்பு ஏற்படுத் தக்கூடிய சூழ்நிலை உருவாகி வருகிறது. மேலும் உணவு தானியங்கள் நச்சு தன்மை பெறுவதோடு மட்டு மல்ல நம்மையும் பாதிப்பு அடைய செய்கிறது.

மேலும் பாசன நீர் மண் வளங்கள், மண்ணில் உள்ள நுண்ணுயிர்களும் பாதிப்பு அடைவதோடு பயிருக்கு நன்மை செய்கிற பூச்சிகளும் அழிக்கப் படுகின்றன என்றும் நெற் பயிரில் நன்மை, தீமை தரும் பூச்சிகளை இனம் கண்டு அறிக்கும் வழிமுறைகளை பற்றியும் விளக்கி பேசினார்.

பயிற்சியில் 25க்கும் மேற் பட்ட விவசாயிகள், தெள் ளூர் மகளிரணியினர் உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் வட்டார தொழில் நுட்ப வல்லுனர் முத்து நன்றி கூறினார்.

**பாலக்கோட்டில் தக்காளி கூழ் பதனிடும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வர வேண்டும் விவசாயிகள் கோரிக்கை**

பாலக்கோடு

பாலக்கோட்டில் தக் காளி கூழ் பதனிடும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வர வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள் ளனர்.

**தக்காளி சாகுபடி**

தர்மபுரி மாவட்டம் மலை கள் சூழ்ந்த பகுதி என்பதால் நல்ல சீதோஷ்ண நிலை உள்ளது. இதனால் காய்கறிகள், பழங்கள் அதிக அளவில் உற்பத்தி செய்யப் பட்டு வருகிறது. கரும்பு, மஞ்சளுக்கு அடுத்தப்படியாக தக்காளி அதிக பரப்பளவில் சாகுபடி செய்யப்படுகிறது. குறிப்பாக பாலக்கோடு, மாரண்டஅள்ளி, காரிமங்கலம் மற்றும் ராயக்கோட்டை பகுதிகளில் அதிக அளவில் தக்காளி பயிர் செய்யப்ப டுகிறது.

இங்கு விளையும் தக்காளி களுக்கு பொதுமக் களிடையே நல்ல வரவேற்பு உள்ளதால் பெரும்பாலான விவசாயிகள் தக்காளி பயிரிட்டு வருகின் றனர். வருடம் முழுவதும் இயற்கையான சீதோஷ்ண நிலை நிலவுவதால் தக்காளி அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இந்த பகுதிகளில் விளையும் தக்காளி களை மார்க்கெட், சந்தைகளில் விவசாயிகள் விற்பனைக்காக கொண்டு வருகின்றனர்.

**தக்காளி கூழ் தொழிற்சாலை**

குறிப்பாக பாலக்கோடு தக் காளி மார்க்கெட்டிற்கு மாவட் டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் விவசாயிகள் தக் காளிகளை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். இங் கிருந்து தமிழகம் மற்றும் அண்டை மாநிலங்களுக்கு லாரிகள் மூலம் தக்காளி ஏற்றுமதி செய்யப்படுகிறது. மேலும் வியாபாரிகள் நேரிடை யாகவே வந்து கொள்முதல் செய்து செல்கின்றனர். அதிக விளைச்சல், விலை வீழ்ச்சி காரணமாக தக்காளிகள் தோட்டத்திலேயே காய்ந்தும், போதிய விலை கிடைக்காமல் சாலைகளில் கொட்டும் நிலையும் ஏற்படுகிறது.

தற்போது பாலக்கோடு மார்க்கெட்டில் ஒரு கிலோ தக்காளி ரூ.30 முதல் ரூ.45 வரை விலை போகிறது. இத னால் விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்கிறது. இந்த விலை உயர்வு விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள் ளது.

எனவே பாலக்கோடு பகுதி யில் தக்காளி கூழ் பதனிடும் தொழிற்சாலைகள் அமைக்க அரசு முன்வர வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். இவர்களின் கோரிக்கை நிறைவேறுமா?

**கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மாம்பழம் விளைச்சல் பாதிப்பு: வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் மாங்கூழ் உற்பத்தி பாதியாக குறையும்**

கிருஷ்ணகிரி

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கோடை மழையும் கைவிட்டதால் எந்த ஆண்டும் இல்லாத அளவிற்கு இந்த ஆண்டு மாம்பழம் விளைச்சல் குறைவாக உள்ளது. இதனால் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் மாங்கூழ் உற்பத்தி பாதியாக குறையும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக மாங்கூழ் உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

<u>மாங்கனி மாவட்டம்</u>

தமிழகத்தில் அதிகபட்சமாக கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 40 ஆயிரம் எக்டேர் பரப்பளவில் விளையும் மாங்கனிகள் இந்தியாவில் உள்ள வெளிமாநிலங்களுக்கு அனுப்பப்படுவதோடு, ஜப்பான், அமெரிக்கா மற்றும் வளைகுடா நாடுகளுக்கும் ஏற்றுமதியாகிறது. இங்கு விளையும் மாங்கனிகளை அரைத்து கூழாக்கி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் பணியில் 70–க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் ஈடுபட்டு வருகின்றன.

மாங்கூழ் தயாரிப்பில் 75 சதவீதம் தோத்தாபுரி எனப்படும் பெங்களூரா வகை மாம்பழத்தில் இருந்தும், மீதம் 25 சதவீதம் ‘அல்போன்சா‘ வகை பழத்தில் இருந்தும் தயாரிக்கப்படுகிறது. இங்கு தயாராகும் மாங்கூழ் 75 சதவீதம் வளைகுடா நாடுகளான சவுதிஅரேபியா, குவைத், ஏமன் போன்ற நாடுகளுக்கும், 15 சதவீதம் ஐரோப்பிய நாடுகளுக்கும், 10 சதவீதம் சிங்கப்பூர், மலேசியா போன்ற 62 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. தற்போது உற்பத்தி செய்யப்படும் மாங்கூழ் 50 சதவீதம் இந்தியாவிலேயே நல்ல விலைக்கு விற்கப்படுகிறது.

<u>மழை இல்லை</u>

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இந்த ஆண்டு மா மரங்கள் சரியான பருவத்தில் பூக்க தொடங்கியது. இதனால் விளைச்சல் இரட்டிப்பாக இருக்கும் என விவசாயிகள் எதிர்பார்த்தனர். ஆனால் பிஞ்சாகி, காயாக உருமாறும் தருவாயில் பெய்ய வேண்டிய மழை சுத்தமாக பெய்யவில்லை.

மேலும் காய் பெருக்கும் பருவத்தில் பெய்யும் கோடை மழையும் இந்த முறை ஏமாற்றியது. இதனால் மாம்பழ விளைச்சல் எதிர்பார்த்த அளவிற்கு இல்லை.

மேலும் கோடை மழை சுத்தமாக பெய்யாத நிலையில் மாங்கூழ் உற்பத்திக்கு பயன்படும் தோத்தாபுரி மற்றும் அல்போன்சா வகை மாங்காய்கள் அளவு பெருக்கவில்லை. மாங்காயில் சதைப்பற்றும் குறைவாகவே உள்ளது. வழக்கமாக நல்ல சதைப்பற்றுள்ள 1 கிலோ மாங்காயில் ½ கிலோ வரை மாங்கூழ் உற்பத்தி செய்யப்படும். இந்த ஆண்டு சதைப்பற்று குறைவாக உள்ளதால் மாங்கூழின் உற்பத்தி அளவு குறைய வாய்ப்புள்ளது. மொத்தத்தில் மாங்காய் கூழ் அரவைக்கு உகந்ததாக இல்லை என்பதே உற்பத்தியாளர்களின் கருத்து.

<u>விலை அதிகம்</u>

மாங்காய் விளைச்சல் குறைவாக உள்ளதால், கடந்த ஆண்டைவிட விலையும் அதிகமாக உள்ளது. மாங்கூழ் உற்பத்திக்கு தேவைப்படும் தோத்தாபுரி வகை பழம் கடந்த ஆண்டு 1 டன் ரூ.6 ஆயிரம் முதல் 8 ஆயிரம் வரை விற்றது. ஆனால், இந்த ஆண்டு தோத்தாபுரி எனப்படும் சேலம் பெங்களூரா வகை மாம்பழம் 1 டன் ரூ.7 ஆயிரம் முதல் ரூ.9 ஆயிரம் வரை விற்கிறது.

இதேபோல் அல்போன்சா வகை மாம்பழத்தின் விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது. கடந்த ஆண்டு அல்போன்சா 1 டன் ரூ.18 ஆயிரம் முதல் 20 ஆயிரம் வரை விற்றது. ஆனால் இந்த ஆண்டு அல்போன்சா வகை மாம்பழம் 1 டன் ரூ.28 ஆயிரம் முதல் 30 ஆயிரம் வரை விற்கிறது. விலை அதிகமாக இருந்தாலும் அரவைக்கு உகந்த மாங்காய் கிடைப்பதில்லை என்பதுதான் சோகம்.

<u>உற்பத்தி குறையும்</u>

மாங்கூழ் அரவைக்கு தகுதியான மாம்பழம் கிடைக்காத நிலையில் தற்போது கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள 70–க்கும் மேற்பட்ட மாங்கூழ் தொழிற்சாலைகளில் வெறும் 10 தொழிற்சாலைகளில் தான் அரவை பணி தொடங்கி உள்ளது. மீதமுள்ள தொழிற்சாலைகள் அரவை பணியை தொடங்கினாலும் மாங்காய் வரத்து குறைவாக உள்ளதால் மாங்கூழ் உற்பத்தி மிகவும் குறைவாகவே இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஆண்டுதோறும் அதிகபட்சமாக 1½ லட்சம் டன் வரை மாங்கூழ் உற்பத்தி செய்யப்பட்டு ஏற்றுமதி செய்யப்படும். ஆனால் இந்த ஆண்டு மாங்கூழ் உற்பத்தி பாதியாக குறையும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அதிகபட்சமாக 70 ஆயிரம் டன் மாங்கூழ் உற்பத்தி

செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் அன்னிய செலாவணி இழப்பு ஏற்படும் என ஏற்றுமதியாளர்கள் வருத்தம் தெரிவித்தனர்.

விலை ஏற்றம் கூடாது

இதுகுறித்து பிரபல மாங்கூழ் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியாளர் டி.மதியழகனிடம் கேட்ட போது அவர் கூறியதாவது:–

கோடை மழை கைவிட்டதால் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மாங்கூழ் அரவைக்கு தகுதியான சதைப்பற்றுள்ள மாங்காய் கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. மாம்பழம் வரத்து குறைவாக உள்ளதால் மாங்காய் விலையை அதிகமாக சொல்கிறார்கள். இதே நிலைதான் கடந்த 2010–ம் ஆண்டு ஏற்பட்டது. அப்போது மாம்பழ விலை உச்சத்தில் இருந்ததால் மாங்கூழின் ஏற்றுமதி விலையும் அதிகமானது. இதனால் நமது மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட மாங்கூழ் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படாமல் சுமார் 1 லட்சம் டன் மாங்கூழ் தேக்கம் அடைந்தது. தேக்கம் அடைந்த மாங்கூழை கடந்த 2 ஆண்டுகளாக விற்று இப்போதுதான் முடித்தார்கள்.

இதே நிலைதான் இப்போது ஏற்பட்டுள்ளது. மாங்கூழ் விலையை 1 டன் 650 டாலருக்கு மேல் விலை உயர்த்தினால், அரபு நாடுகள் மற்றும் ஐரோப்பிய நாடுகள் நமது மாங்கூழை வாங்குவதை விடுத்து, மெக்சிகன் மற்றும் தென்ஆப்பிரிக்கா போன்ற வேறு நாடுகளில் இருந்து குறைந்த விலைக்கு மாங்கூழை இறக்குமதி செய்து கொள்கிறார்கள். இதனால் நமது மாங்கூழ் ஏற்றுமதி மொத்தமாக பாதிக்கப்பட்டு, தேக்கம் அடையும் நிலை ஏற்படும். எனவே உற்பத்திக்கு தேவையான மாம்பழத்தின் விலையை தாறுமாறாக உயர்த்துவதை விவசாயிகளும், உற்பத்தியாளர்களும் தவிர்க்க வேண்டும். இந்த ஆண்டு தோத்தாபுரி விலை 1 கிலோ ரூ.7 முதல் 7.50 வரை இருந்தால்தான் ஏற்றுமதி நன்றாக இருக்கும். இதற்கு விவசாயிகள் தரப்பு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இவ்வாறு மதியழகன் தெரிவித்தார்.

===========

மாங்கூழ் கேனுக்கு அரபு நாடுகள் தடை

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள மாங்கூழ் தொழிற்சாலைகளில் பெரும்பாலும் கேனில்தான் மாங்கூழ் அடைத்து ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஒரு கேனின் எடை 3.1 கிலோ இருக்கும். மாங்கூழ் உற்பத்தி செய்து கேனில் அடைக்கும் போது சுகாதாரம் பாதிக்கப்பட வாய்ப்பு

இருப்பதாக கூறி சில அரபுநாடுகளில் மாங்கூழ் கேனுக்கு இந்த ஆண்டு தடை விதிக்கப்பட்டுள்ளது. மாறாக அசெப்டிக் பேக்கிங் எனப்படும் பேரல்களில் அடைத்து கொண்டு வரப்படும் மாங்கூழை மட்டுமே இறக்குமதி செய்ய சில வெளிநாடுகள் முடிவெடுத்துள்ளன. ஒரு பேரலில் 220 கிலோ மாங்கூழ் பேக்கிங் செய்யப்படும். கிருஷ்ணகிரி மாவட்டத்தை பொறுத்தவரை 90 சதவீதம் கேனில் அடைக்கப்பட்டு அனுப்பப்படுவதால் இந்த வகையிலும் ஏற்றுமதி பாதிக்கப்படலாம் என உற்பத்தியாளர்கள் அச்சத்தில் உள்ளனர்.

**கச்சிராயப்பாளையம் அருகே தண்ணீர் இன்றி வறண்ட கோமுகி அணை**

கச்சிராயப்பாளையம்,

கச்சிராயப்பாளையம் அருகே தண்ணீர் இன்றி கோமுகி அணை வறண்டு காட்சி அளிக்கிறது.

கோமுகி அணை

விழுப்புரம் மாவட்டம் கச்சிராயப்பாளையம் அருகே கல்வராயன்மலை அடிவாரத் தில் கோமுகி அணை உள்ளது. 46 அடி உயரம் கொண்ட இந்த அணையின் புதிய பாசனம், பழைய பாசனம் மூலம் கச்சிராயப்பாளையம், வடக்கனந்தல், மாத்தூர், மண்மலை, கரடிசித்தூர், பால்ராம்பட்டு, தாவடிப்பட்டு, செம்படாக்குறிச்சி, மட்டிகைக் குறிச்சி, சடையம்பட்டு, சோமண்டார்குடி உள்பட பல்வேறு கிராமங்களில் உள்ள 10 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான விவசாய நிலம் ஆண்டுதோறும் பாசன வசதி பெறுகிறது.

நீரின்றி வறண்டது

கடந்த ஆண்டு பருவமழை சரியாக பெய்யாததால் அணையின் நீர்மட்டம் முழு கொள்ளளவை எட்டவில்லை. இருப்பினும் அக்டோபர் மாதம் விவசாய பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதையடுத்து அணை பகுதியில் மழை பெய்யாததால் நீர்மட்டம் வேகமாக குறைந்து, பாசனத்துக்கு தண்ணீர் வழங்க முடியவில்லை. இத னால் விவசாயிகள் பாதிக்கப்பட்டனர்.

தொடர்ந்து 3 மாதங்களாக மழை பெய்யாததால் கோமுகி அணை வறண்டு காட்சி அளிக்கிறது. அணையின் உட்பகுதியில் படிந்துள்ள மண், வெயிலின் தாக்கத்தால் வெடிப்பு விழுந்துள்ளது. அணையில் வறட்சியை போக்க கோடை மழை பெய்ய வேண்டும் என்று விவசாயிகள் எதிர்பார்த்து உள்ளனர்.

**பெரம்பலூர் மாவட்டத்தில் வறட்சி நிவாரண திட்டத்தில் 2 ஆயிரம் பயனாளிகளுக்கு கால்நடை தீவன விதைகள் வினியோகம்**

பெரம்பலூர்

பெரம்பலூர் மாவட்டத் தில் வறட்சி நிவாரண திட்டத்தில் 2,000 பயனாளிகளுக்கு கால் நடை பராமரிப்புத் துறை யின்மூலம் மானியத்தில் தீவன விதைகள் வினி யோகம் செய்யப்படு கிறது.

**தீவன பற்றாக்குறை**

தமிழக முதலமைச்சர் ஏழை எளிய பெண்களின் பொருளாதார முன்னேற்றத் திற்கு விலையில்லா ஆடுகள், கால்நடை பராமரிப்புத் துறை யின் மூலம் செயல் படுத்திட அரசு ஆணை வழங்கி சிறப் பாக செயல் படுத்தப்பட்டு பய னாளிகள் நல்ல பொருளாதார வளர்ச்சி யினை கண்டுள்ளார் கள்.கால்நடைகளின் வறட்சி கால தீவன பற்றாக்குறையை போக்க பல்வேறு தீவன அபிவிருத்தி திட்டங்களையும் அறிவித்து நிலம் தயார்செய்தல், விதைகள் வாங்குதல், உரங்கள் வாங்குதல் மற்றும் தீவனம் பயிர்செய்தல் பின்நேர்த்தி பணியான களையெடுத்தல், நீர்பாய்ச்சுதல் போன்ற பணி களுக்காக மானியம் வழங்கி தீவன உற்பத்தியை பெருக்கி அதன் மூலம் பெரம்பலூர் மாவட்டத்தின் பால் உற்பத் தியை அதிகரிக்கவும் தமிழக முதலமைச்சர் நட வடிக்கை எடுத்து கால்நடை பராமரிப் புத் துறையின் மூலம் செயல் படுத்த ஆணை வழங்கி உள் ளார்.

**2 ஆயிரம் பயனாளிகள்**

இத்திட்டத்தின்கீழ் பெரம்பலூர் மாவட்டத்தில் ஒரு பயனாளிக்கு 0.50 ஏக்கர் வீதம் 2 ஆயிரம் பயனாளி களுக்கு 1,000 ஏக்கரில் தீவன பயிர் வளர்க்க இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது. இதில் நிலம் தயார் செய்ய தீவன விதை வாங்க விதை விதைத்தல், உரமிடுதல், களை யெடுத்தல், தண்ணீர்பாய்ச்சு தல் பணிக்கு ஒரு அலகுக்கு (0.50 ஏக்கருக்கு) மொத்தமாக ரூ.3 ஆயிரத்து 400 மானியமாக வழங்க தமிழக முதலமைச்சர் ரூபாய்.68 லட்சம் பெரம்பலூர் மாவட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

**விண்ணப்பிக்க வேண்டுகோள்**

இத்திட்டத்தில் பயன்பெறும் பயனாளிகளிடம் நீர்பாசன வசதி இருத்தல் வேண்டும். 0.50 ஏக்கரில் கட்டாயம் பயிர் செய்யப்படவேண்டும். வழங்கப்படும் விதையை முழுமையாக பயன் படுத்தப் பட வேண்டும். இதன்மூலம் பெரம்பலூர் மாவட்டத்தில் வறட்சியின் காரணமாக கால் நடைகளுக்கு ஏற்பட்டுள்ள தீவன பற்றாக்குறையை போக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. இத்திட்டத்தில்

சேர விரும்பும் கால்நடை வளர்க்கும் உழவர் பெருமக்கள் தங்கள் கிராமத்திற்கு அருகில் உள்ள கால்நடை மருந்தக கால்நடை உதவி மருத்து வர்களை மற்றும் வேளாண் அலுலவர்களை அணுகி விண்ணப்பிக்கும்படி கேட்டு க்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்கண்ட தகவலை பெரம்பலூர் மாவட்ட கலெக்டர் தரேஸ் அஹமது தெரிவித்துள்ளார்.

**குஜிலியம்பாறையில் வறட்சி நிவாரணம் கேட்டு விவசாயிகள் சாலை மறியல்**

திண்டுக்கல்

குஜிலியம்பாறையில் வறட்சி நிவாரணம் கேட்டு விவசாயிகள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

<u>வறட்சி மாவட்டம்</u>

திண்டுக்கல் மாவட்டத்தில் பருவ மழை பொய்த்ததால், விவசாய நிலங்கள் வறட்சியில் சிக்கியது. இந்த வறட்சியால் குஜிலியம்பாறை ஒன்றிய பகுதிகளில் ஏராளமான விவசாயிகள் பாதிக்கப்பட்டனர்.

இந்நிலையில் திண்டுக்கல் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக தமிழக அரசு அறிவித்தது. இதைத்தொடர்ந்து குஜிலியம்பாறை ஒன்றிய பகுதிகளுக்கு வறட்சி நிவாரணமாக ரூ.4 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

<u>சாலை மறியல் போராட்டம்</u>

இதைத்தொடர்ந்து வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் கணக்கெடுப்பு பணி நடந்தது. இதில் பலரது பெயர் விடுபட்டுள்ளதாகவும், பாதிக்கப்பட்ட அனைவருக்கும் வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தி குஜிலியம்பாறையில் விவசாயிகள் நேற்று சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் திண்டுக்கல்–கரூர் சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இது பற்றிய தகவல் கிடைத்ததும் குஜிலியம்பாறை போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மறியலில் ஈடுபட்ட விவசாயிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

<u>பேச்சுவார்த்தை</u>

அப்போது, அவர்கள் அனைத்து விவசாயிகளுக்கும் பாரபட்சம் இல்லாமல் நிவாரண தொகை வழங்க வேண்டும் என்றும், வறட்சி பகுதிகள் குறித்து வருவாய்த்துறை அதிகாரிகள் விவசாயிகளை நேரில் அழைத்து பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர்.

இதைத்தொடர்ந்து வருவாய்த்துறை அதிகாரிகள் தலைமையில் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்படும் என்று போலீசார் உறுதியளித்தனர். அதன்பின்னர் விவசாயிகள் மறியலை கைவிட்டு கலைந்து சென்றனர்.

**தேனி மாவட்டத்தில் காய்கறிகள் விலை 'கிடு,கிடு' உயர்வு**

ஆண்டிப்பட்டி

தேனி மாவட்டத்தில் காய் கறிகளின் விலை கடந்த சில நாட்களாக 'கிடு,கிடு' வென உயர்ந்துள்ளது.

**காய்கறி சாகுபடி**

தேனி மாவட்டம் விவசாயம் சார்ந்த மாவட்டமாகும். இங்கு அனைத்து வகை காய்கறிகள் சாகுபடியும் நடைபெறுகிறது. தேனி மாவட்டத்தில் விளையும் காய்கறிகள் சின்னமனூர், கம்பம், ஆண்டிப்பட்டி, தேனி சந்தைகள் மூலமாக கேரள மாநிலம் மற்றும் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கு கொண்டு செல்லப்படுகிறது.

கடந்த சில ஆண்டுகளாக தேனி மாவட்டத்தில் பருவ மழை பொய்த்த நிலையில் காய்கறிகள் சாகுபடி பரப் பளவு குறைந்தது. இதன் காரணமாக சந்தைக்கு காய்கறி கள் வரத்து குறைந்துள்ளது.

மேலும் வெளி மாவட்டங் களில் இருந்து காய்கறிகள் வாங்கப்பட்டு தேனி மாவட் டத்தில் விற்பனை செய்யும் நிலை உள்ளது. இதுதவிர விவசாய முறைகளும் மாறிவிட்டது. ஒரு விவசாயி ஒரு பயிரை சாகுபடி செய்தால் அதே பயிரை மற்ற விவசாயி ளும் பயிர் செய்து வருகின்றனர். இதனால் பலவகை காய்கறிகள் சாகுபடி என்பது அரிதாகி விட்டது.

**விலை உயர்வு**

பொதுவாக கோடைக் காலத்தில் காய்கறிகள் விலை அதிகரித்து காணப்படும். கடந்த சில ஆண்டுகளாக நிலவும் வறட்சி காரணமாக இந்த ஆண்டு கோடையில் முன் எப்போதும் இல்லாத வகையில் காய்கறிகள் விலை ‘கிடு,கிடு’வென உயர்ந்துள்ளது. குறிப்பாக சில்லறை வியா பாரத்தில் இதுவரை இல்லாத வகையில் காய்கறிகள் விலை மிகவும் அதிகரித்து காணப்படு கிறது.

குறிப்பாக ஒரு கிலோ சின்னவெங்காயம்ரூ.60, பச்சைமிளகாய் மற்றும் தக்காளி ரூ.40, இஞ்சி ரூ.200, கேரட் மற்றும் பீன்ஸ் ரூ.48 என்ற அளவில் விலை உயர்ந் துள்ளது. காய்கறி கடைகளில் மக்கள் சிறிதளவு வாங்கி வந்த கொத்தமல்லி தழையின் விலையும் கிலோ ரூ.160ஆக ‘கிடு,கிடு’வென உயர்ந்துள்ளது. இதன் காரணமாக அனைத்துத் தரப்பு மக்களும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது வைகாசி மாதம் தொடங்கி உள்ள நிலையில் திருமண விழாக்கள் மற்றும் பல்வேறு திருவிழாக்கள் நடைபெறும் என்பதால் காய்கறிகளின் விலை மேலும் உயரும் வாய்ப்புள்ளதாக காய்கறி வியாபாரிகள் தெரிவித்தனர்.

தினகரன்

**துறையூர் ஒன்றியத்தில் 175 விவசாயிகளுக்கு ரூ 9.25 லட்சம் வறட்சி நிதி**

துறையூர், : துறையூர் ஒன்றியத்தில் 175 விவசாயிகளுக்கு ரூ.9.25 லட்சம் வறட்சி நிதி வழங்கப்பட் டது.

துறையூர் ஒன்றியத்தில் கலிங்கமுடையான்பட்டி, வீரமச்சான்பட்டி, காவேரி பட்டி, நாகநாயக்கன் பட்டி, கங்கானிப்பட்டி, மெய்யம்பட்டி, சேனப்பநல்லூர், சேனப்பநல்லூர்புதூர் ஆகிய கிராமங்கள் வீரமச்சான்பட்டி தொட க்க வேளாண் கூட்டுறவு வங்கியை சார்ந்துள்ளன. இந்த கிராமங்களில் வசிக்கும் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு தமிழக அரசு சார் பில் வறட்சி நிவாரண நிதி வழங்கும் விழா சேனப்பநல்லூரில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி வளாகத்தில் நடைபெற்றது. ஒன்றியக்குழு தலைவர் பொன்காமராஜ் தலைமை வகித்து, வறட்சியால் பாதிக்கபட்ட 175 விவசாயிகளுக்கு ரூ.9,24, 920 நிதியை வழங்கினார். விழாவிற்கு வீரமச்சான்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி சங்க தலைவர் தங்க ராஜ் முன்னிலை வகித் தார். வங்கி செயலர் செல்வகுமார் வரவேற்றார். தங்கவேல், சுப்ரமணி, சோமு உள்பட பொதுமக் கள் கலந்துகொண்டார் கள்.

உழவர் பெருவிழா

மானாமதுரை, : மானாமதுரை அருகே கீழப்பசலை ஊராட்சி வேதியரேந்தலில் உழவர் பெருவிழா நடந்தது. கீழப்பசலை ஊராட்சித் தலைவர் கலாநாகேஸ்வரி முத்துராமு தலைமை வகித்தார். வேளாண்மை உதவி இயக்குநர் மூர்த்தி முன்னிலை வகித்தார். விழாவில் பாரம்பரிய பொருட்களின் உபயோகம், சிறுதானியங்கள் சாகுபடி, நிலக்கடலை, உளுந்து உள்ளிட்ட பயறு வகைகள், நெல், கரும்பு சாகுபடி குறித்தும் விளக்கினர். தோட்டக்கலை, கால்நடை, மீன்வளம், வேளாண்மை பொறியியல், வேளாண்விற்பனை போன்ற துறைகளின் அலுவலர்கள் தங்களது துறையின் கீழ் செயல்படும் திட்டங்கள் குறித்து விளக்கினர். கால்நடைத்துறை சார்பில் ஆடு, மாடுகளுக்கு மருந்துகள், தடுப்பூசிகள் போடப்பட்டன. நெல், உளுந்து பயிர்களில் விதை நேர்த்தி, நுண்ணுயிர் உர உற்பத்தி, நெற்பயிர்களில் இலை வண்ண அட்டை மூலம் உரமிடும் முறைகள் பற்றி செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.

**ஆத்தூர், தலைவாசல் பகுதியில் கடும் வறட்சியால் காய்கறி உற்பத்தி பாதிப்பு**

ஆத்தூர், : ஆத்தூர், தலைவாசல் பகுதியில் கடும் வறட்சி காரணமாக காய்கறி உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

பருவமழை பொய்த்ததால் சேலம் மாவட்டம், ஆத்தூர், தலைவாசல் உள்ளிட்ட பகுதியில் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. இதனால் அப்பகுதியில் உள்ள அனைத்து நீர்நிலைகளும் வறண்டுள்ளன. நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்து குடிநீருக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் ஆத்தூர், தலைவாசல் பகுதியில் போதிய தண்ணீர் இல்லாததால் விவசாயம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக இப்பகுதியில் காய்கறி உற்பத்தி பெரும் பாதிப்பிற்குள்ளானது. இதனால் ஆத்தூர் உழவர் சந்தைக்கு விவசாயிகள் கொண்டுவரும் காய்கறிகளின் அளவு குறைந்துள்ளது. வரத்து குறைவால் ஆத்தூர் பகுதியில் காய்கறிகளின் விலை கடுமையாக உயர்ந்து வருகிறது. நேற்று விற்பனை செய்யப்பட்ட காய்கறிகளின் விலை நிலவரம் (கிலோ ஒன்றுக்கு) வருமாறு: சின்ன வெங்காயம் `45, பெரிய வெங்காயம் `22, முருங்கைக்காய் `30, முள்ளங்கி `30, தக்காளி `40, பீன்ஸ் `60, பீட்ரூட் `40, கேரட் `40, உருளைக்கிழங்கு `42, முட்டை கோஸ் `30, கத்தரிக்காய் `30, வெண்டைக்காய் `30, கொத்தவரை `35, கீரை வகைகள் கட்டு ஒன்று `6 வரையும் விற்பனை செய்யப்பட்டது. இந்த விலை உயர்வால் ஏழை மற்றும் நடுத்தர மக்கள் காய்கறிகள் வாங்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

**வேப்பிலை ஊராட்சியில் உழவர் பெருவிழா**

ஓமலூர், : ஓமலூர் அருகே உள்ள வேப்பிலை ஊராட்சியில் காடையாம்பட்டி வட்டார வேளா ண் மைத்துறை சார்பில் உழவர் பெருவிழா நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் விவசாயிகளின் விவரங்கள் கணினியில் பதியப்பட்டு அவர்களின் மண் மாதிரி களை ஆய்வு செய்து அதனடிப்படையில் ஒருங்கிணைந்த கையேடு வழங்கப்பட்டது. விழாவில் புதிய தொழில்நுட்ப உத்திகளான குழித்தட்டு நாற்றங்கால், மஞ்சள் விதைநேர்த்தி, பாலித்தின் நிலப்போர்வை அமைத்தல் போன்ற செயல் விளக்கங்களை தோட்டக்கலை உதவி இயக்குநர் சேகர், வேளாண்மை உதவி இயக்குநர் நாசர், காடையாம் பட்டி வேளாண்மை அலு வலர் சம்பத்குமார் ஆகி யோர் செய்து காண்பித்தனர். இவ்விழாவில் எலி ஒழிப்பு பற்றிய விழிப்புணர்வு பிரசாரம் செய்யப்பட்டு இலவச எலி ஒழிப்பு ரசாய னம் விவசாயிகள் அனை வருக்கும் வழங்கப்பட்டது. பண்ணைக் கருவிகளை மானியத்துடன் பெறுவது குறித்தும், வேளாண் விற் பனை மற்றும் வணிகத்துறை வேளாண்மை வளர்ச்சி திட்டங்கள் பற்றியும் அலுவலர்கள் எடுத்துரைத்தனர். உழவர் பெருவிழாவில் ஒருங்கிணைந்த கையேடு பெறாத, விவசாயிகள் தங்களின் நிலங்கள் குறித்த விவரங்கள் மற்றும் மண் மாதிரிகளுடன் பதிவு செய்து கொண்டனர்.

**ஏற்காடு பகுதியில் உழவர் பெருவிழா**

ஏற்காடு, : ஏற்காடு பகுதியில் உழவர் பெருவிழா நடைபெற்றது. தமிழகம் முழுவதும் உழவர் பெருவிழா நடந்து வருகிறது. அதன் படி சேலம் மாவட்டம், ஏற்காட்டிலும் 23 இடங்களில் உழவர் பெருவிழா நடைபெற்றது. இதில் 67 கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர். அவர்களுக்கு ஏற்காடு வேளாண்மை உதவி இயக்குனர் செந்தில்குமார் விவசாயம் தொடர்பாக பல்வேறு பயிற்சிகளை செயல்விளக்கம் மூலம் அளித்தார். இதில் வேளாண் அலுவலர்கள் மகாலட்சுமி, கந்தசாமி, வைத்தியலிங்கம், உதவி வேளாண் அலுவலர்கள் சீனிவாசன், சங்கர் ஆகியோர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**இச்சிபாளையத்தில் உழவர் பெருவிழா**

திருப்பூர், : வேளாண்துறை சார்பில் இச்சிபாளையம் கிராமத்தில் உழவர் பெருவிழா நடந்தது. இதில் ஏராளமான விவசாயிகள் பங்கேற்றனர். திருப்பூர் மாவட்டம் ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றியபகுதியில் உள்ள இச்சிபாளையத்தில் உழவர் பெருவிழா நடந்தது. விழாவுக்கு இச்சிபாளையம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் செந்தில்குமார் தலைமை தாங்கினார். வேளாண்மை உதவி இயக்குநர் வேலுச்சாமி முன்னிலை வகித்தார். இதில் துணை வேளாண்மை அலுவலர் துணை தோட்டக்கலை அலுவலர், உதவி விதை அலுவலர், வேளாண்மை உதவி அலுவலர்கள், தோட்டக்கலை உதவி அலுவலர்கள், அட்மா திட்ட அலுவலர்கள், வேளாண் பொறியியல்துறை, கால்நடை பராமரிப்புத்துறை, பட்டுவளர்ச்சித்துறை, விதைச்சான்றளிப்புத்துறை, வேளாண் விற்பனை மற்றும் வேளாண்வணிகத்துறை ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் ஆகிய துறையைச் சேர்ந்த அதிகாரிகள் கலந்துகொண்டு தங்கள் துறை தொழில்நுட்பங்களையும், மானியத்திட்டங்களையும் விளக்கி கூறினர். தொடர்ந்து அனைத்துத்துறை தொழில்நுட்பங்கள் கொண்ட வேளாண் ரதம் வெள்ளியம்பதிகிராமத்தில் வலம் வந்தது. கருத்துக்காட்சியும் அமைக்கப்பட்டு இருந்தது. மண்மாதிரி எடுத்தல், மண்புழு உரத்தயாரிப்பு, பயிறுவகை விதை நேர்த்தி, ஒட்டு ரக காய்கறி நாற்று தயாரிப்பு ஆகியவற்றிற்கு செயல்விளக்கத்துடன் செய்து காண்பிக்கப்பட்டது. தொடர்ந்து, வேளாண்மை உதவி இயக்குநர் வேலுச்சாமி, விவசாயிகளுக்கு இடுபொருட்கள் மற்றும் ஒருங்கிணைந்த கையேடு ஆகியவற்றை வழங்கினார். இதனைத் தொடர்ந்து அலுவலர்கள், வல்லுனர்கள் விவசாயிகள் இடையே கலந்துரையாடல் நிகழ்ச்சியும், கலை நிகழ்ச்சியும் நடந்தது. விழாவில் ஊத்துக்குளி வட்டாரப் பகுதியை சேர்ந்த ஏராளமான விவசாயிகள் கலந்துகொண்டனர்.

**முகூர்த்தம், திருவிழா காரணமாக பூ விலை கடும் உயர்வு**

கரூர், : முகூர்த்தம், திருவிழா மற்றும் வரத்து குறைவு காரணமாக கரூர் மார்க்கெட்டில் பூக் களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. கரூர் மாரியம்மன் பூ மார்க்கெட்டுக்கு கரூர் மாவட்டத்தில் வேலாயுதம்பாளையம், நொய்யல், நாமக்கல் மாவட்டம், பரமத்தி, வேலூர், திண்டுக்கல் மாவட்டம் பாளையம், குஜிலியம்பாறை உள்ளிட்ட ஊர்களில் இருந்து பூக்கள் விற்பனைக்காக கொண்டு வரப்படுகின்றன. வறட்சி காரணமாக பூக்களின் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. இதன்காரணமாக மார்க்கெட்டுக்கு பூக்களின் வரத்து குறைந்துவிட்டது. மேலும் கரூர் மாவட்டத்தில் கோயில் திருவிழாக்கள் நடைபெற்று வருகிறது. இதனால் பூக்களின் தேவை அதிகரித்துவிட்டது. இதன் காரணமாக கடந்த ஒரு வாரமாக பூக்களின் விலை உயர்ந்து வருகிறது என கரூர் பூமார்க்கெட் தலைவர் முருகேசன் தெரிவித்தார். வரத்து குறைவு மற்றும் முகூர்த்தம், மாரியம்மன்கோயில் பூச்சொரிதல் விழா காரணமாக பூக் களின் தேவை அதிகமாகி விட்டது. இதனால் கடந்த வாரத்தை விட கிலோவுக்கு ரூ.50வரை விலை உயர்ந்துவிட்டது. நேற்று கரூர் பூமார்க்கெட்டில் பூக்கள் ஏலம் விடப்பட்டது. மல்லிகை ஒரு கிலோ ரூ.220, முல்லை ரூ.200, செவ்வந்தி ரூ.150, மருது ரூ50, சம்பங்கி ரூ.250, அரளி ரூ.200, கோழிக்கொண்டை ரூ.80, ரோஜா ரூ.120க்கு ஏலம் போனது. பூக்களின் தேவை அதிகமாக இருந்ததால் ஆர்டர் எடுத்து பூக்களை தொடுப்பவர்கள் வேறுவழியின்றி வாங்கி சென்றனர். பூக்களை இவ்வளவு அதிக விலைக்கு வாங்கி தொடுத்து விற்பனை செய்யும்போது வருமானம் எதிர்பார்த்தபடி இல்லை என பூ வியாபாரிகள் தெரிவித்தனர்.

**மானிய விலையில் விவசாயிகளுக்கு நீர்மூழ்கி மோட்டார்**

திருமயம், : திருமயம் ஒன்றியம் ராராபுரத்தில் உழவர் பெருவிழா நடந்தது. ஊராட்சி தலைவர் அந் தோணி செல்வி தலைமை வகித்தார். துணைத்தலை வர் நடராஜன் முன்னிலை வகித்தார். வேளாண் உதவி இயக்குனர் ராமமூர்த்தி, வேளாண் அலுவலர் மகேஸ்வரி, வட்டார தொழில்நுட்ப மேலாளர் ஆனந்தஜோதி, துணை வேளாண் அலுவலர் செல்லப்பா, வேளாண்மை உதவி பொறியாளர் பாண் டியன், உதவி வேளாண் அலுவலர் சுப்பிரமணி, தோட்டக்கலை துணை அலுவலர் நாராயணசாமி, உதவி விதை அலுவலர் சுப்பிரமணியன் ஆகியோர் தங்களது துறைகள் குறித்து விளக்கி பேசினர். இதைதொடர்ந்து ரூ.50,000 மதிப்பிலான நீர்மூழ்கி மோட்டார் மற்றும் இடுபொருட்கள் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. வேளாண் உதவி அலுவலர்கள் அண்ணாமலை, திருக்குமரன், ராதா ஆகியோர் பண்ணைகுட்டைகள் அமைத்தல் மற்றும் மண்மாதிரி சேகரிப்பின் முக்கியத்துவம் குறித்து விளக்கினர்.

**ராமசாமிபுரத்தில் உழவர் பெருவிழா 610 விவசாயிகளிடமிருந்து 300 மண்மாதிரி சேகரிப்பு**

அறந்தாங்கி, : அறந்தாங்கி அருகே உள்ள மாத்தூர் ராமசாமிபுரத்தில் உழவர் பெருவிழா நடந்தது. அறந்தாங்கி வேளாண் உதவி இயக்குனர் பொன் னையா தலைமை வகித்தார். ராமசாமிபுரம் ஊராட்சி தலைவர் மலர்வள்ளி முன்னிலை வகித்தார். அறந்தாங்கி துணை வேளாண் அலுவலர் அன்பழகன் வரவேற்றார். தோட்டக்கலை துறை உதவி வேளாண் அலு வலர் முருகேசன், வேளாண் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் ஜெய ராமன், வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை உதவி அலுவலர் பழனிவேலு, ஒழுங்குமுறை விற்பனைக் கூட இளநிலை உதவியாளர் பத்மநாபன், நீர்வள நிலவள ஆதாரத்துறை அலுவலர் சந்திரமோகன் ஆகியோர் தங்களது துறைகளில் விவசாயிகளுக்கு உள்ள மானிய திட்டங்கள் குறித்து எடுத்துரைத்தனர். விழாவில் 610 விவசாயிகளிடமிருந்து 300 மண்மாதிரி சேகரிக்கப்பட்டு ஒருங்கிணைந்த விவசாயிகள் கையேடு படிவம் வழங்கப்பட்டது. இதைதொடர்ந்து விவசாயிகளுக்கு விசைத்தெளிப்பான், ஒருங்கிணைந்த கையேடு வழங்கப்பட்டன. வேளாண் உதவி அலுவலர்கள் சந்திரசேகரன், ரதிதேவி, வனிதா, மகேந்திரன், தொழில்நுட்ப அலுவலர்கள் கலையரசன், ராமச்சந்திரன் உள்ளிட் டோர் கலந்து கொண்டனர். இதேபோல் வெள் ளாட்டு மங்கலம், ஏகப்பெருமகளூர், காரைக் காடு உள்ளிட்ட கிராமங்களுக் கான உழவர் பெரு விழா நெம்மேலிக்காடு கிராமத்தில் நடந்தது. அறந்தாங்கி ஒன்றியக்குழு துணைத்தலைவர் பெரிய சாமி தலைமை வகித் தார். அறந்தாங்கி வேளாண் துறை உதவி இயக்குனர் பொன்னையா, ஏகப்பெருமகளூர் ஊராட்சி தலைவர் கார்த்திகேயன் முன்னிலை வகித்தனர். ஊராட்சி துணைத்தலைவர் காளிமுத்து வரவேற்றார்.

**நடமாடும் மண், பாசனநீர் ஆய்வு முகாம் பூம்புகாரில் 18ல் துவக்கம்**

நாகை, : பூம்புகாரில் நடமாடும் மண் பரி சோதனை மற்றும் பாசனநீர் ஆய்வு முகாம் வரும் 18 மற்றும் 19ம் தேதி நடைபெறுகிறது. இதனை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ளவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

நாகை மாவட்டம் பூம்புகாரில் உள்ள சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் அனைவருக்கும் மீன் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்தில் விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த பண்ணைய திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இங்கு விவசாயிகளுக்கு உழவர் மன்றம் மூலமாக தொழில்நுட்ப உதவி, பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் நடமாடும் மண் மற்றும் பாசன நீர் ஆய்வு முகாம் வரும் 18 மற்றும் 19 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ளது. விவசாயிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி தங்கள் நிலத்தின் மண்ணின் கார அமிலத்தன்மையையும், உப்பின் நிலை, தழைச்சத்து, சாம்பல் சத்து, மணிச்சத்து அளவு நிலை கண்டறிந்து நம் பயிர் சாகுபடிக்கேற்ப உர பரிந்துரை செய்து மண் வளம் மற்றும் பாசன நீரை

பாதுகாத்து நல்ல மகசூலை பெறலாம். ஒவ்வொரு மண் ஆய்விற்கும் மற்றும் பாசன நீருக்கும் ஆய்வு கட்டணம் ரூ.20 செலுத்த வேண்டும். ஆய்வு முடிந்ததும் மண்வள அட்டை வழங்கப்படும். இத்தகவலை சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தை சேர்ந்த ஆராய்ச்சியாளர் செல்வராசு விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கம்பம் பள்ளத்தாக்கில் அழிவை நோக்கி தென்னை விவசாயம் மரங்களை வெட்டி அகற்றும் விவசாயிகள்**

கூடலூர். : கம்பம் பள்ளத்தாக்கு பகுதிகளில் அழிந்து வரும் தென்னை விவசாயத்தை காக்க, அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என தென்னை விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். தலைமுறைகள் கடந்தும் பலன்தரும் பணப்பயிரான தென்னை, உலக அளவில் 93 நாடுகளில் பயிரிடப்படுகிறது. இதில் இந்தியாவின் பங்கு 23.44 சதவிகிதமாகும். கேரளா, தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் ஆந்திர பிரதேசங்களில் தென்னை விவசாயம் அதிக அளவில் நடைபெறுகிறது. தமிழகத்தில் கோவை, தஞ்சை, தர்மபுரி, வேலூர், கன்னியாகுமரி, நெல்லை திண்டுக்கல், தேனி உள்ளிட்ட மாவட்டங்களில் 3 லட்சத்து 90 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் தென்னை பயிரிடப்பட்டுள்ளது.

தேனி மாவட்டத்தில் கூடலூர், கம்பம், சுருளிப்பட்டி, காமயகவுண்டன் பட்டி, உத்தமபாளையம், கோம்பை, பண்ணைப்புரம் உள்ளிட்ட கம்பம் பள்ளத்தாக்கு பகுதிகளில் 25 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் தென்னை விவசாயம் நடைபெற்று வருகிறது. பருவமழை பொய்த்துப்போவதாலும், வேர்வாடல் நோய் தாக்கத்தாலும் தென்னை விவசாயம் வீழ்ச்சியை நோக்கி அடி எடுத்து வைத்துள்ளது. தமிழகத்தின் பல மாவட்டங்களில் தென்னந்தோப்புகள் அழிக்கப்பட்டு குடியிருப்பு மையங்களாக மாற்றப்பட்டு வருகிறது. கடந்த சில ஆண்டுகளாக கம்பம், கூடலூர், ஆங்கூர்பாளையம், காமயகவுண்டன்பட்டி பகுதிகளிலுள்ள தென்னைமரங்களை வாடல் நோய் தாக்கி வருகிறது. இந்நோய் தாக்கிய மரங்களிலுள்ள மட்டைகள் அடிப்பகுதி பழுத்து சோகைகள் மஞ்சள் நிறமாகி மகசூல் படிப்படியாக குறைந்து, மொட்டை மரமாகிறது. இந்நோய் தாக்கிய மரங்களை விவசாயிகள் வெட்டி அழித்து வருகின்றனர்.

இதுகுறித்து விவசாயத்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், ‘இந்நோய் கூடலூர், கம்பம் மற்றும் மேற்குத்தொடர்ச்சிமலை அடிவாரப்பகுதிகளிலுள்ள 20 முதல் 25 ஆண்டுக்கு மேலான தென்னைமரங்களை மட்டுமே அதிக அளவில் பாதித்துள்ளது. இது ஒருவகை பூஞ்சானநோய். இந்நோய்தாக்கிய மரம் உடனடியாக இறப்பதில்லை. மரத்தின் மட்டையின் அடிப்பாகம் பழுத்து, மரத்தின் மகசூல் படிப்படியாக குறையத்தொடங்கும். மரங்களுக்கு முறையாக எரு, உரம் வைக்காமல் விடுவது, பராமரிப்பு செய்யப்படாதது தென்னையை இந்நோய் தாக்க காரணமாகிறது. மேலும் நிலத்தில் மூன்றடிக்கு கீழே சுண்ணா ம்பு மண்ணாக உள்ள

பகுதிகளிலுள்ள மரங்களையும் இந்நோய் தாக்குகிறது. முறையான விவசாயம், பராமரிப்பு இல்லாமல் இந்நோயை கட்டுப்படுத்த முடியாது' என்றார்.

மருந்துகள் இறக்குமதி எம்எல்ஏ கோரிக்கை
கம்பம் எம்எல்ஏ ராமகிருஷ்ணன் கூறுகையில், 'தென்னை விவசாயிகள் சார்பில் கோரிக்கை மனு ஒன்றை மத்திய வேளாண்மை துறை அமைச்சரிடம் வழங்கி உள்ளேன். புதிய ரகங்களை தென்னை ஆராய்ச்சி நிலையங்கள் மூலம் விநியோகம் செய்யவேண்டும். இலவச மண்பரிசோதனை செய்து மண்ணின் தரத்திற்கேற்ப உரம் பரிந்துரை செய்யவேண்டும். உரத்தினை மத்திய மாநில அரசுகள் மானியமாகவோ, இலவசமாகவோ வழங்கவேண்டும். நோய்தாக்குதலுக்கு உண்டான தென்னை மரங்களுக்கு காப்பீட்டுத்தொகையாக மரம் ஒன்றுக்கு ரூபாய் 4ஆயிரம் வீதம் வழங்கப்பட வேண்டும். சொட்டு நீர் பாசனத்திற்கு 100 சதவீதம் மானியம் வழங்கவேண்டும். தமிழகத்தில் தென்னை நல வாரியம் உருவாக்கப்படுதல் மூலம் தென்னை சாகுபடிக்கு அரசின் கூடுதல் கவனம் கிடைக்கப்பெறும். வேர்வாடல் நோய்க்கு டாக்டர் ஹென்றிலூயி கண்டுபிடித்த மூலிகை மருந்தை பயன்படுத்த வேண்டும். தென்னை சார்நோய்களுக்கு மருந்து பிலிப்பைன்ஸ் நாட்டில் தயாரிக்கப்படுகிறது. அரசு அதனை இறக்குமதி செய்து தென்னை சாகுபடியாளர்களுக்கு வழங்கவேண்டும்' என்றார்.

**கம்பத்தில் உழவர் பெருவிழா**

கம்பம், : கம்பம் குலாலர் திருமணமண்டபத்தில் உழவர் பெருவிழா நடந் தது. நகராட்சி துணைத்தலைவர் அபுதாகிர் தலைமை வகித்தார். ஒன்றியக்குழு தலைவர் முருகன், விவசாய சங்க தலைவர் நாராயணன் முன்னிலை வகித்தனர். கலெக்டர் பழனிசாமி, வேளாண் இணை இயக்குனர் சுந்தரம், தோட்டக்கலை உதவி இயக் குனர் ராஜன், சென்டெக்ட் வேளாண் அறிவியல் நிலைய ஒருங்கிணைப்பாளர் மாரிமுத்து மற்றும் வேளாண் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர். வேளாண் பாரம்பரிய பொருள்கள், தோட்டக்கலை, கால்நடை பராமரிப்பு, வேளாண் பொறியியல், வேளாண் வணிகத்துறை சார்பாக கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது. ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**சர்க்கரை ஆலை தேர்தல் நியாயமாக நடக்காவிடில் கரும்புகளை அனுப்புவதை மறுபரிசீலனை**

புவனகிரி, : சேத்தியாத்தோப்பு எம்ஆர் கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு நியாயமாக தேர்தல் நடத்தாவிட்டால், விவசாயிகள் கரும்பு உற்பத்தி செய்து சர்க்கரை ஆலைக்கு அனுப்புவதை மறு பரிசீலனை செய்வோம் என கரும்பு விவசாய சங்கங்கள் எச்சரிக்கை

விடுத்துள்ளன.
சேத்தியாத்தோப்பு எம்ஆர் கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவு சர்க்கரை ஆலை அனைத்து கரும்பு விவசாயிகள் சங்கம், டிராக்டர் உரிமையாளர்கள், ஓட்டுநர்கள் சங்கம் ஆகியவற்றின் நிர்வாகிகள் தங்க ஆனந்தன், மதியழகன், ஆதிமூலம், வேங்கடகிரி, வைத்தியநாதன், ஆலம்பாடி மதியழகன், குணசேகரன், பாலு, வேல்முருகன், ஜெயராமன், வழக்கறிஞர் மனோகரன் உள்ளிட்டோர் சர்க்கரை ஆலையின் தனி அலுவலர் சிவமலரை(பொறுப்பு) அவரது அலுவலகத்தில் நேரில் சந்தித்தனர். அப்போது அவரிடம் மனு ஒன்றை அளித்தனர். அதில் அவர்கள் கூறியிருப்பதாவது.
சேத்தியாத்தோப்பு எம்ஆர் கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிர்வாகக் குழு தேர்தல் நடைபெற இருப்பதாக அறிக்கையில் கண்டுள் ளோம். நஷ்டத்தில் இயங்குகிற இந்த சர்க்கரை ஆலைக்கு தேர்தல் நடத்துவது என்பது பொருத்தமற்றது. இதனால் ஆலைக்கு மேலும் நிதிச்சுமை ஏற்படும். ஆலை தோற்றுவிக்கப்பட்ட இந்த 25 ஆண்டுகளில், ஒரு கட்டு கரும்பு கூட உற்பத்தி செய்து அனுப் பாத, நிலங்களே இல்லாத பலர் சர்க்கரை ஆலையில் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். அவர்களை நிர்வாக குழுவில் பங்கெடுக்க வைக்கும் இந்த செயல் கூட்டுக் கொள்ளைக்கே வழி வகுக்கும்.
இதையும் மீறி தேர்தல் நடத்துவது என முடிவு எடுத்தால், அது ஆலை வளர்ச்சியில் கவனம் செலுத்தி உழைத்த கரும்பு விவசாயிகள் பங்கெடுக்கும் உண்மையான தேர்தலாக இருக்க வேண்டும். தேர்த லில் வாக்களிக்க வரும் விவசாயிகள் அச்சமின்றி சுதந்திரமாக வாக்களிக்கும் வகையில் அந்தந்த கிராமங்களில் வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட வேண்டும். போட்டியிட விரும்புகின்ற அத்தனை வேட்பாளர்களுக்கும் முறையாக விண்ணப்பங்களை வழங்கிட வேண்டும். வாக்காளர்களை அடையாளம் காணும் வகையில் வாக்குச் சாவடிகளில் கரும்பு அலுவலர்கள் அமர வேண்டும். இதுபோன்ற நியாய மான கோரிக்கைகளை உதாசீனப்படுத்தி பொய் யான தேர்தலை நடத்திட முயற்சி எடுத்தால், சர்க்கரை ஆலையின் முதுகெலும்பாக விளங்கும் கரும்பு விவசாயிகள் கரும்பை உற்பத்தி செய்து ஆலைக்கு அனுப்புவதை மறு பரிசீலனை செய்ய நேரிடும் என எச்சரிக்கிறோம். அதனால் நியாயமான தேர்தல் நடத்திட வேண்டும்.
இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டு உள்ளது.

**அண்ணாமலை பல்கலைக்கழக வண்ண மீன் கண்காட்சிக்கு முதல் பரிசு**

புவனகிரி, : தமிழக அரசின் மீன்வளத் துறையால் தமிழ்நாடு மீன்வளத் திருவிழா - 2013 சென்னையில் உள்ள தீவுத்திடலில் நடந்தது. இதில் மீன் உற்பத்தியாளர்கள், மீன் வளர்ப்போர்கள், ஏற்றுமதி, இறக்குமதி செய்வோர், மீன் ஆராய்ச்சியாளர்கள் என நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பங்கேற்றனர். சிறு அரங்குகளில் தங்களது நிலைய செயல்முறைகள் குறித்து விளக்கம் அளித்தார்கள்.
இதில் வண்ண மீன் கண்காட்சி நடந்தது. இந்த கண்காட்சியில் சிதம்பரம் அண்ணாமலை

பல்கலைக்கழக மீன் கண்காட்சியும் இடம் பெற்றது. அண்ணா மலை பல்கலைக் கழகத்தின் பரங்கிப்பேட்டை கடல் அறிவியல் புலம் சார்பில், முனைவர் அஜீத்குமார் தலைமையிலான ஆராய்ச்சிக் குழுவினர் பங்கேற்று தங்கள் மையத்தில் உற்பத்தி செய்த 10 வகையான வண்ண மீன் களை பார்வைக்கு வைத்தார்கள். நிறைவு விழாவில் கடல் வண்ண மீன்களின் கண்காட்சிக்கான முதல் பரிசு அண்ணாமலை பல் கலைக்கழக கடல் அறிவியல் புலத்திற்கு கிடைத்தது. சமூக நலத்துறை அமைச்சர், வளர்மதி, மீன்வளத்துறை அமைச்சர் ஜெயபால், சென்னை மேயர் சைதை துரைசாமி ஆகியோர் வழங்கிய இந்த விருதை கடல் அறிவியல் புல முனைவர் அஜீத்குமார் பெற்று கொண்டார். சிறந்த அரங்கத்திற்கான விருதை அண்ணாமலை பல்கலைக்கழக மீன் கண்காட்சி அரங்கத்திற்கு மீன்வளத்துறை செயலாளர் ககன்தீப்சிங்பேடி வழங்கினார்.

**மும்முனை மின்சாரம் குறைப்பு எதிரொலி நெல்வயல் புற்களாக மாறியது**

காட்டுமன்னார்கோவில், :காட்டுமன்னார்கோவில் பகுதியில் பெரும்பாலானோர் விவசாயிகள். வடவாறு, வடக்கு ராஜன் வாய்க்கால் ஆகியவற்றின் மூலம் பாசனம் பெற்று விவசாய பணிகள் நடைபெறுவது வழக்கம். இந்த ஆண்டு பருவ மழை பொய்த்ததால் விவசாய பணிகள் பெரிதும் பாதிப்படைந்தது. இதனால் நெல் விலை கடுமையாக உயர்ந்தது. விவசாயிகளுக்கு குறைந்த மகசூல் கிடைத்தாலும், நெல்விலை உயர்வால் லாபம் கிடைத்தது. இதை கருத்தில் கொண்டு ஆழ்குழாய் கிணறு வைத்திருப்பவர்கள் நவரை பருவத்தில் நெல் சாகுபடியை செய்தனர். ஆனால் மும்முனை மின்சாரம் சரியாக வழங்கபடாததால் நடவு செய்த வயல்களில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டது. இதனால் நெற்பயிரில் அதிக அளவு களைகள் முளைத்தது. நெற்பயிரை விட புல்களே வயல்களில் அதிகம் காணப்பட்டது. இதனால் விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

**சிறுமொளசி உழவர் பெருவிழாவில் விவசாயிகளுக்கு தொழில்நுட்ப கையேடு**

திருச்செங்கோடு,: சிறுமொளசி ஊராட்சியில் நடந்த உழவர் பெருவிழாவில் விவசாயிகளுக்கு தொழில்நுட்ப கையேடு வழங்கப்பட்டது. திருச்செங்கோடு அருகே உள்ள சிறுமொளசி ஊராட்சியில் உழவர் பெருவிழா நடந்தது. ஊராட்சி மன்ற தலைவர் மாதேஸ்வரன் தலைமை வகித்தார். ஒன்றியக்குழு உறுப்பினர் சுரேஷ்குமார் முன்னிலை வகித்தார். வேளாண் பொறியியல் துறை மூலம் மினி டிராக்டர், இயந்திர தெளிப்பான், பேட்டரி தெளிப்பான், குழியிடும் கருவி ஆகியவை குறித்து செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. வேளாண்துறை மற்றும் தோட்டக்கலைத்துறை சம்பந்தமான செயல் விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

இந்த விழாவில் திருச்செங்கோடு வேளாண் உதவி இயக்குனர் நமச்சிவாயம், நாமக்கல் விதை

சான்று உதவி இயக்குனர் சுப்ரமணியம், வேளாண் பொறியியல் துறை திருச்செங்கோடு உதவி செயற்பொறியாளர் பார்த்தீபன், தோட்டக்கலை உதவி இயக்குனர் மாலதி ஆகியோர் கலந்து கொண்டு வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கி பேசினர். கால்நடைத்துறை மூலம் நடத்தப்பட்ட முகாமில் முன்னோடி விவசாயிகள் மாணிக்கம், மணி ஆகியோர் தங்களது விவசாய அனுபவங்களை விளக்கிக் கூறினர். இதில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு தொழில்நுட்ப கையேடு வழங்கப்பட்டது. பட்டு வளர்ச்சித்துறை, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை பற்றி எடுத்துக்கூறப்பட்டது. விவசாயிகளுக்கான விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. துணை வேளாண் அலுவலர் ஞானபிரகாசம் நன்றி கூறினார். ஏற்பாடுகளை திருச்செங்கோடு உதவி வேளாண் அலுவலர்கள் குமார், கிருஷ்ணமூர்த்தி, நந்தகுமார், வடிவேலு, சுப்ரமணியம், ஜெயமணி, ராஜவேலு, வடிவேல் முருகன், மணிகண்டன், வெற்றிவேல் உள்ளிட்ட குழுவினர் செய்திருந்தனர்.

**சிறு விவசாயிகள் சங்கம் துவக்கம்**

கோத்தகிரி, : கோத்தகிரியில், புதிய நாக்குபெட்டா சிறு விவசாயிகள் சங்கம் துவங்கப்பட்டுள்ளது. சங்க தலைவராக காரிதாசன், துணைத்தலைவராக சிவக்குமார், பொதுச்செயலாளராக ஜக்க லோடை சிவக்குமார், துணை செயலாளராக சேகர், பொருளாளராக தேவராஜ், செயற்குழு உறுப்பினர்களாக ரமேஷ், குட்டி ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதுகுறித்து ஜக்கலோடை சிவக்குமார் கூறும்போது, `இச்சங்கம் மூலம் கொய்மலர் சாகுபடியாளர்கள், தேயிலை விவசாயிகள் மற்றும் விவசாய தொழிலாளர்கள் ஆகியோரை ஒன்றிணைத்து அவர்களின் குழந்தைகளின் கல்வி, கலாசாரம் மற்றும் அரசிடம் இருநƒது நேரடி மானியம், இடுபொருள் மானியம் ஆகியவற்றை பெற்றுத் தருவதே நோக்கமாகும்'என்றார்.

**மண்புழு உரமிட்டு மண்ணை மேம்படுத்தினால் அதிக மகசூல் பெறலாம் வேளாண் துணை இயக்குனர் தகவல்**

பாடாலூர், : விவசாயிகள் தங்கள் நிலங்களுக்கு மண்புழு உரம் இட்டு மண்ணை மேம்படுத்துவதன் மூலம அதிக மகசூல் பெறலாம் என பெரம்பலூர் மாவட்ட வேளாண்மை துணை இயக்குனர் சுப்ரமணியன் தெரிவித்தார். பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் தாலுகா இலந்தங்குழி கிராமத்தில் வேளாண்மைத்துறை சார்பில் உழவர் பெருவிழா நேற்று முன்தினம் நடைபெற்றது. விழாவிற்கு ஆலத்தூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பழனிச்சாமி தலைமை வகித் தார். உதவி வேளாண்மை அலுவலர் ராஜ்குமார் வரவேற்றார். இலநதங்குழி ஊராட்சி மன்ற தலைவர் அன்பழகன் முன்னிலை வகித்தார். பெரமபலூர் மாவட்ட வேளாண்மை துணை இயக்குனர்

சுப்ரமணியன் பேசுகையில், விவசாயிகள் தங்கள் நிலங்களில் மண் பரிசோதனை செய்து அதற்கேற்ப மண்புழு உரமிட்டு மண்ணை மேம்படுத்த வேண்டும். இவ்வாறு மண்ணை மேம்படுத்துவதன் மூலம் வருங்காலங்களில் பயிர் செய்யும் பயிர்களில் அதிக மகசூல் பெற வாய்ப்புண்டு. மேலும், வ¤வசாயிகள் தங்கள் நிலங்களில் பண்ணை குட்டைகள் வெட்டுவதன் மூலம் நிலத்தடி நீர்மட்டம் உயர வாய்ப்பாக அமையும் என்றார். விழாவில் வேளாண்மை துணை அலுவலர் மகேந்திரபூபதி, வேளாண்மை அலுவலரகள் மாய வேல், சநதிரன், உதவி வேளாண்மை அலுவலர்கள் ராஜ்குமார், மணிகண்டன், ராஜ், பழனிமுத்து, அட்மா திட்ட மேலாளர் வீரமணி ஆகியோர் வேளாண்மைத்துறை திட்டங்கள் குறித்து விளக்கம் அளித்தனர். வேளாண்மை துணை அலுவலர் மகேந்திரபூபதி நன்றி கூறினார்.

**மண் வளம் அதிகரிக்க கோடை உழவு அவசியம் வேளாண் அதிகாரி அறிவுரை**

கும்பகோணம், : கும்பகோணம் வேளாண் கோட்டத்தில் உள்ள விவசாயிகள் கோடை உழவு மேற்கொள்ள வேண்டும் என வேளாண் உதவி இயக்குநர் லட்சுமிகாந்தன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் கூறியுள்ளதாவது: கோடை உழவு செய்வதால், கடின மண், நயம் கொண்ட களிவாகு போன்ற நிலங்களில் ஏற்படும் நில வெடிப்பு தவிர்க்கப்பட்டு மண்ணின் ஈரப்பதம் ஆவியாகி விரையமாகாமல் காக்கப்படுகிறது. மண்வெடிப்பு தவிர்க்கப்படுவதால் கோடை நீர் பாய்ச்சும்போது தண்ணீர் விரயம் தவிர்க்கப்படுகிறது. நடவுக்கும், நாற்றங்காலுக்கும் செய்யப்படும் ஆரம்பகட்ட உழவு சுலபமாகிறது. மண்ணின் நயமும், கட்டிகள் அமைப்பும் உடைக்கப்பட்டு மண்ணின் பவுதீக வளம் சீர்செய்யப்படுகிறது. இதனால் விதை முளைப்புத்திறன் அதிகரிப்பதுடன் பயிரின் மகசூல் கூடுகிறது.
மண்ணின் நீர் பிடிப்புத்தன்மை அதிகரிக்கிறது. மண்ணில் உள்ள கூட்டுப்புழுக்கள் வெளிக்கொணரப்பட்டு அவை இறக்க வாய்ப்புள்ளது. களைகள் ஆரம்ப கட்டத்திலேயே அழிக்கப்படுகின்றன. மண்ணில் காற்றோட்டம் அதிகரிப்பதால் பயிர் வளர்ச்சிக்கு உகந்ததாகிறது. மண்ணில் உள்ள அங்கக பொருட்கள் மண்ணிலேயே மடிக்கப்படுவதால் மண்ணின் அங்கக வளம் கூடுகிறது.
புதிய டெல்டா பகுதிகள் மற்றும் ஆற்றுப்படுகை நிலங்களில் காணப்படும் மிருதுவான மண் நயம் கொண்ட மண் வாகு அல்லது இருமண் நிலங்களில் கோடை உழவு செய்யும்போது, மூடியுள்ள மேல் மண் திறக்கப்படுவதால் மேல் மண் மற்றும் அடி மண்ணில் உள்ள ஈரம் வெகு விரைவில் ஆவியாகி விரயமாகிறது. நைட்ரேட் வடிவிலுள்ள தழைச்சத்து நிலத்தின் அடிமட்டத்திற்கு சென்று கிட்டா நிலை ஏற்பட்டு மண் வளம் குறைகிறது.
களர், உவர் நிலங்களில் கோடை உழவு செய்ய வேண்டாம். கோடை உழவு செய்வதால் மேல் மண் பொலபொலப்பாகி அடிமண்ணிலுள்ள ஈரம் மேலாக வந்து ஆவியாகும்போது, அதனுடன் கீழ் மண்ணிலுள்ள உப்புகளும் நீரில் கரைந்து வந்து, நீர் ஆவியானதும் உப்புகள் மேல் மட்டத்தில்

படிந்து மேலும் மண்ணில் தீமையை ஏற்படுத்தி பயிர் வளர்ச்சியைப் பாதிக்கும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**மண் மாதிரி ஆய்வுகளை வேளாண் வலைதளத்தில் தெரிந்துகொள்ள ஏற்பாடு உழவர் பெருவிழாவில் தகவல்**

சேதுபாவாசத்திரம், : மண் மாதிரி ஆய்வுகளை வேளாண் வலைதளத்தில் தெரிந்துகொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக உழவர் பெருவிழாவில் தெரிவிக்கப்பட்டது. சேதுபாவாசத்திரம் அடுத்த பெருமகளூர் தெற்கு, சோலைக்காடு, விளங்குளம், வாத்தலைக்காடு, கொளக் குடி, பனங்குளம், ருத்திர சிந்தாமணி ஆகிய கிராமங்களில் உழவர் பெருவிழா நடைபெற்றது.

வேளாண் உதவி இயக்குநர் பெரியசாமி பேசுகையில், ‘மண் மாதிரி பகுப்பாய்வு முடிவுகளுக்கு ஏற்ப பயிர் சாகுபடி திட் டத்தை கையாளவேண்டும். சேதுபாவாசத்திரம் வட்டா ரத்தில் நடப்பாண்டில் 13,000 விவசாயிகளுக்கு வேளாண் வலைதளத்தில் மண் மாதிரி குறித்த அடிப்படை புள்ளி விவரம் பதிவு மேற்கொள்வதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள் ளது. மண் மாதிரிகளை அலுவலகத்திற்கு எடுத்து வந்து கொடுக்கும் சிரமத்தை கருத்தில்கொண்டு பல்துறை அலுவலர்களும் உழவர் பெருவிழா நடைபெறும் போது அந்தந்த கிராமங்களி லேயே நேரடியாக பெற்றுக் கொண்டு அடிப்படை புள்ளி விவரங்கள் குறித்த முழு அளவில் பூர்த்தி செய் யப்பட்ட படிவம் 1ஐயும் வழங்கலாம். மண் மாதிரிக்கு உண்டான பகுப்பாய்வு கட்டணம் ரூ.20 ரூபாய். ஆடுதுறை மண் ஆய்வ கத்திற்கு அனுப்பப்பட்டு பரிசோதனைக்கு பின் பேரூ ட்டம் மற்றும் நுண்ணூட்ட சத்துகள், மண்ணின் கார- அமில தன்மைகள் கண்ட றியப்பட்டு அதற்கு தகுந்தாற்போல் பேரூட்டம், நுண்ணூட்டம், உயிர், இயற்கை, பசுந்தழை உரங் கள் பரிந்துரைக்கப்பட்டு சாகுபடிக்கேற்ற பயிர்களும் பரிந்துரைத்து திட்டம் கொடுக்கப்படுகிறது. மண் வள பாதுகாப்பு அட்டை களும் வழங்கப்பட உள்ளது. அனைத்து விவரங்களும் வேளாண் வலைதளத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்டு எந்த நேரத்திலும் விவசாயி கள் தெரிந்து கொள்ளக்கூடிய வசதி செய்யப்பட்டுள்ளது. நெற்பயிரில் திருந்திய நெல் சாகுபடி முறையை கையாண்டு 2 மடங்கு மகசூ லும் 3 மடங்கு வருமானமும் விவசாயிகள் பெறவேண்டும். இவ்வாறு அவர் பேசினார். துணை வேளாண் அலுவலர் மணிமாறன், தோட்டக்கலை அலுவலர் சக்திவேல் உள்ளிட்டோர் துறை சார்ந்த திட்டங்கள் குறித்து செயல்விளக்கம் செய்து காட்டினர்.

**ருசிமிகுந்த பலாப்பழம் ராமநாதபுரத்தில் குவிப்பு**

ராமநாதபுரம், : ருசிமிகுந்த பலாப்பழம் ராமநாதபுரம் சந்தையில் விற்பனைக்கு குவிந்துள்ளது. முக்கனிகளில் ஒன்றான பலாப்பழம் சீசன் தற்போது துவங்கியுள்ளது. ராமநாதபுரம் பகுதியில் பலாப்பழம் விற்பனை சூடுபிடித்துள்ளது. ராமநாதபுரம் அரண்மனைப்பகுதி, புதிய பஸ்ஸ்டாண்ட் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து ஏராள மான பலாப்பழம் லாரி களில் கொண்டுவரப்பட்டு விற்பனைக்காக குவித்து வைக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து புதுக்கோட்டையைச் சேர்ந்த பலாப்பழம் வியாபாரி ரகுமத்துல்லா கூறுகையில், தற்போது பலாப்பழம் சீசன் துவங்கியுள்ளது. தேனி, திண்டுக்கல், மதுரை உள்ளிட்ட மார்க்கெட்டில் இருந்து வரும் பலா பழத்தைவிட புதுக்கோட்டை யில் இருந்து வரும் பலா ருசியும் மணமும் நிறைந்ததாக இருக்கும். இதனை வாங்குவதற்கு எப்போதும் மக்கள் கூட்டம் அலை மோதும். தற்போது ரூ.20 முதல் ரூ.100 வரை விலை யில் ஒரு பழம் பருவத்திற்கு ஏற்ப விற்பனை செய்துவருகிறோம். ராமநாதபுரத்தில் வாரச்சந்தை நடக்கும் புதன்கிழமையும் மற்றும் சத்திரக்குடி, பரமக்குடி உள்ளிட்ட பகுதிகளில் வாரசந்தை நாட் களில் பலாப்பழம் விற்பனை அதிகமாக இருக்கும். இதனால் லாரிகளில் கொண்டுவந்து விற்பனை செய்கிறோம். மொத்தமாக எடுத்து வருவதால் பழம் குறைந்த விலைக்கு விற் பனை செய்யப்படுகிறது என்றார்.

**காட்டூரணி கூட்டுறவு கடன் சங்கத்தில் வறட்சி நிவாரணம் வழங்கும் நிகழ்ச்சி**

ராமநாதபுரம், : காட்டு ரணி கூட்டுறவு கடன் சங்கத்தில் விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்கும் நிகழ்ச்சி நேற்று நடந் தது.ராமநாதபுரம் அருகே பட்டணம்காத்தானில் காட்டூரணி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் அமைந்துள்ளது. இங்கு விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்கும் நிகழ்ச்சி நேற்று நடந்தது. கூட்டுறவு கடன் சங்க தலைவர் ராஜேந்திரன் தலைமை வகித்து வறட்சி நிவாரணத்தை வழங்கினார். ராமநாதபுரம் வருவாய் ஆய்வாளர் ரவி, கடன் சங்க செயலாளர் மீனாட்சி சுந்தரம், விஏஓ காஜா நசீர், முன்னாள் விஏஓ கிருஷ் ணன், கழுகூரணி பூபதி, செல்வம், மாயாகுளம் துணை தலைவர் கிருஷ் ணன் உட்பட விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர். நேற்று 20 விவசாயிகளுக்கு ரூ.1.76 லட்சம் நிவாரணம் வழங்கப்பட்டது. ஒவ்வொரு வருவாய் கிராமத்திற்கும் வறட்சி நிவாரணம் வழங்க தேதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதன்படி கழுகூரணி குரூப்பிற்கு மே 15, 16, 17, 18 தேதிகளும், பட்டணம்காத்தான் குரூப்பிற்கு 20, 21ம் தேதியும், சக்கரக்கோட்டை குரூப்பிற்கு 21 முதல் 23 ம் தேதி வரையும், பழங்குளம் குரூப்பிற்கு 24, 25 ஆகிய தேதிகளிலும், ஆர்.எஸ்.மடை, அச்சடிப்பிரம்பு குரூப்பிற்கு 26, 27, 28 ஆகிய தேதிகளிலும் வறட்சி நிவாரணம் வழங்க நாள் ஒதுக்கப்பட்டுள்ளது.

**காங்கேயன் கால்வாய் பாசனத்தில் பயன்பெறும் 2,500 ஏக்கர் நெற்பயிர் கருகும் அபாயம் கடனா நதிநீர் பங்கீட்டில் சிக்கல்**

நெல்லை, : கடனா நதி நீர் பங்கீட்டில் நிலவும் சிக்கல் காரணமாக காங் கேயன் கால்வாய் பாசனத்திற்கு உட்பட்ட 2 ஆயிரத்து 500 ஏக்கர் நெற்பயிர்கள் கருகும் அபாயம் உள்ளது. நெல்லை மாவட்ட விவசாய நிலங்களை வளப்படுத்தும் அணைகளில் பாபநாசம், மணிமுத்தா றுக்கு அடுத்தபடியாக கடனா அணைக்கும் முக்கிய பங்கு உண்டு. இந்த அணையின் பாசன கால்வாய்களான ஆழ்வார்குறிச்சி கால்வாய் மூலம் சுமார் 1500 ஏக்கர் நிலங்க ளும், காங்கேயன் கால்வாய் மூலம் 4500 ஏக்கரும், அரசபத்து கால்வாய் மூலம் 1500 ஏக்கரும், ஆம்பூர் கால்வாய் மூலம் 1400 ஏக்கர் நிலங்களும் பாசன வசதி பெற்று வருகின்றன. நெல்லை மாவட்டத்தில் இரு ஆண்டுகளாகவே முன்கார், கார் சாகுபடிகளுக்கு அணைகளில் தண் ணீர் திறக்கப்படவில்லை. இருப்பினும் இவ்வாண்டு கோடை காலத்தில் பெய்த மழையால் கடனா அணையில் போதிய அளவு தண்ணீர் இருப்பு உள்ளது. குடிநீருக்காக இத்தண்ணீர் வழங்கப்படும் நிலையில், அதிலுள்ள நீர் கசிவு கால்வாய்கள் மூலம் முன்கார் சாகுபடிக்காக அனுப்பப்பட்டு வருகிறது.

கடனா அணை பாச னத்தை பொறுத்தவரை 4 கால்வாய்களின் விவசாய பிரதிநிதிகளும் கூடி, இக்கால்வாய் தண்ணீரை முன்கார் சாகுபடிக்கு இரு கால்வாய்களுக்கு மட்டும் அனுப்ப முடிவு செய்யப்பட்டது. பொதுப்பணித்துறை அதிகாரிகள் முன்னிலையில் நடந்த ஒப்பந்தத்தின்படி முன்கார் சாகுபடிக்கு ஆழ்வார்குறிச்சி, காங்கேயம் கால்வாய்களில் தண்ணீர் வழங்கவும், கார் சாகுபடிக்கு அரசபத்து, ஆம்பூர் கால்வாய்க ளுக்கு தண்ணீர் அளிக்கவும் ஏற்கனவே முடிவு செய்யப்பட்டது.

இந்நிலையில் ஒப்பந்தப்படி முன்கார் சாகுபடி யை விவசாயிகள் துவக்கிய நிலையில், காங்கேயம் கால்வாய்க்கு போதிய அளவு தண்ணீர் வந்து சேர வில்லை. இதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகள், சங்க பகிர்மானக் குழு தலைவர் ஆறுமுகம், பகிர் மான உறுப்பினர்கள் சிவ குருநாதன், வேலாயுதம் ஆகியோர் தலைமையில் நேற்று நெல்லை கலெக்டர் அலுவலகத்திற்கு பயிர்க ளோடு வந்தனர். அவர்கள் கலெக்டரிடம் அளித்த மனு விபரம்: காங்கேயன் கால்வாய் 15 குளத்து மடைகளை கொண்ட பாசனமாகும். விவசாய சங்க பிரதிநிதிகள் செய்து கொண்ட ஒப்பந்தப்படி எங்கள் கால்வாய்க்கு உட்பட்ட 2 ஆயி ரத்து 500 ஏக்கரில் முன்கார் சாகுபடியில் நெல் பயிரிடப்பட்டு வருகிறது. பயிர் பொதி பட்டத்திற்கு வந்த நிலையில், இன்னும் ஒரு மாத காலம் தண்ணீர் போதிய அளவு கிடைத் தால், நெற்கதிர்கள் விளைச்சலுக்கு வந்து விடும். ஆனால் கடனா நதி மேல்பாசன

விவசாயிகள் தண்ணீரை முற்றிலுமாக அடைத்து விடுகின்றனர். இதனால் எங்களுக்கு போதிய அளவு தண்ணீர் வந்து சேரவில்லை. பொதி பருவத்தில் கருகும் நிலை யில் உள்ள எங்கள் பயிர் களை காப்பாற்ற மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.நாளை மறியல். இதற்கிடையே மார்க்சிஸ்ட் மாவட்ட செயலாளர் பாஸ்கரன் கலெக்டரிடம் அளித்துள்ள மனுவில், கடனாநதி பாசனத்தில் பிசான பருவ சாகுபடி செய்ய முடியாமல் விவசாயிகள் பாதிப்படையந்தனர். தற்போது பருவம் தவறி பெய்த மழையில் அணையில் தண்ணீர் நிரம்பியுள்ளது. அணையின் கசிவு தண்ணீரை கொண்டு காங்கேயன் கால்வாய், காக்கநல்லூர் கால்வாய் பாசனத்தில் 2 ஆயிரத்து 500 ஏக்கர் நெல் நடவு செய்யப்பட்டுள்ளது. இன்னும் 20 நாட்களில் பயிர்கள் அறுவடைக்கு தயாராகி வரும் நிலையில் தண்ணீரின்றி பயிர்கள் கருகும் அபாயம் நிலவுகிறது. எனவே பயிர்களை காப்பாற்ற கடனாநதியில் இருந்து தண்ணீர் திறக்கக் கோரி நாளை (17ம் தேதி) பள்ளக்கால் பொதுக்குடியில் மறியல் போராட்டம் நடத்தப்படும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**நெல்லையில் மே 24ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

நெல்லை, : நெல்லை மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மே 24ஆம் தேதி நடக்கிறது.

இதுகுறித்து கலெக்டர் சமயமூர்த்தி கூறியிருப்பதாவது: நெல்லை மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் ஒவ்வொரு மாதமும் மூன்றாவது வெள்ளிக்கிழமை நடத்தப்படும். இந்த மாதம் அனைத்து தாலுகாக¢களிலும் ஜமாபந்தி நடந்து வருகிறது. எனவே அனைத்து துணை கலெக்டர்கள், மாவட்ட அலுவலர்கள், கோட்ட அலுவலர்கள், வேளாண் துறை, புள்ளியியல் துறை அலுவலர்கள் ஜமாபந்தி பணியில் ஈடுபட்டுள்ளனர். எனவே இந்த மாதம் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மே 24ஆம் தேதி தாலை 10 மணிக்கு நெல்லை மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் நடைபெறும். இவ்வாறு கலெக்டர் தெரிவித்துள்ளார்.